TANRECTA SPEAKS FEBRUARY - 2020


TANRECTA SPEAKS FEBRUARY - 2020

Newspaper Reg.No.TNBIL/2003/12746, licensed to post with prepayment with postal Reg. No. Try/041/2020 - 2022
Posted at RMS, Trichy Junction, Trichy-620 001
Date of Posting - 5th of Every Month


To

________________________________________

________________________________________

________________________________________

டெலிவரி ஆகாவிடில் கீழ்காணும் முகவரிக்கு தயவு செய்து திருப்பி அனுப்பவும்
**தி பிரிண்டிங் ஹவுஸ், காஜாமலை, திருச்சிராப்பள்ளி - 620 023.**

## பதிப்பாசிரியர் குழு

1. **முனைவர் T.N. கோகுல்நாத் பாபு**, மாநிலத் தலைவர்
2. **பேரா. இ.பி. பெருமாள்**, மாநில பொதுச் செயலாளர், பதிப்பாசிரியர்
3. **பேரா. எம். பாலசுப்ரமணியன்**, மாநிலப் பொருளாளர்
4. **முனைவர் ந. மாரிசாமி**, மாநிலத் துணைத் தலைவர்
5. **முனைவர் ம. இராஜகோபால்**, மாநிலத் துணைத் தலைவர்
6. **பேரா. பார்வதி கோபாலன்**, மாநிலத் துணைத் தலைவர்
7. **பேரா. S. சிவசண்முகம்**, மாநில இணைச் செயலாளர்
8. **பேரா. S. சந்திரா**, மாநில மகளிர் ஒருங்கிணைப்பாளர்


**TANRECTA SPEAKS - TNBIL/2003/12746**

Owned, Edited and Published by Prof. E. P. Perumal, The General Secretary, Tamil Nadu Retired College Teachers' Association.

Printed by S. Zeenath Beevi at The Printing House, No.6, Race Course Road, Khajamalai, Trichy-620 023. Ph : (0431) 2420121
Email : tanrectatrichy@gmail.com


# TANRECTA SPEAKS


Voice - XVIII FEBRUARY - 2020 Speech 8

Published on 5th of Every Month


TANRECTA

# தமிழ் நாடு ஓய்வு பெற்ற கல்லூரி ஆசிரியர் கழகம்

பதிவு எண். 236/2000



பேரா. நரசிங்கம்


**Tamil Nadu Retired College Teachers' Association**
Newspaper Regn. No. TNBIL/2003/12746
Website: www.tanrecta.org
Rs. 4 per copy - Subscription (Annual) Rs. 40

Muthukkalathi Street,
Tiruvallikkeni,
Chennai - 600 005

## தலைவர் பக்கம்

அன்புள்ள பேராசிரியர்க்கு, வணக்கம்.

திட்டமிட்டபடி நம் அமைப்பின் செயற்குழுக்கூட்டம் ஜனவரி 25ம்தேதி திருச்சியில் நடந்து முடிந்திருக்கிறது.நீதிமன்றத்தின் வழிகாட்டுதலின்படி கிளைச்செயலர்கள் கிளைகளில் விவாதித்து தீர்மானங்களுடன் வந்திருந்தனர். மொத்தம் 34 கிளைகளில் 5 கிளைகளிலிருந்து யாரும் வரவில்லை.பதிவு செய்த 26 கிளைகளில் இப்பொழுது அமுலில் இருக்கும் அமைப்பு விதிகளின் படியும், திருவாரூர், பரமத்திவேலூர், விருதுநகர் கிளைகளில் அமைப்புவிதிகளில் மாற்றம் செய்ததற்குப்பின் தேர்தலை நடத்தவேண்டும் எனவும் தீர்மானித்திருப்பதாக செயலர்கள்கொடுத்த ஒப்புதல் மற்றும்அவர்கள் கொடுத்த கடிதங்களின் அடிப்படையிலும் தீர்மானங்கள் பதிவு செய்யப்பட்டன. செயற்குழுவிற்குவராத கிளைகளான கோவை, தூத்துக்குடி, காஞ்சிபுரம், கிருஷ்ணகிரி மற்றும் பொறையாற் கிளைச்செயலர்களை கைப்பேசியில் தொடர்புகொண்டதில் ஐவருமே இருக்கின்ற அமைப்புவிதிகளின்படி தேர்தல் நடத்தப்படவேண்டும் என அவர்கள் கிளையில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளதாக தெரிவித்தனர். ஆகவே இந்த 5 கிளைகளையும் கணக்கில்கொண்டு 31:3 என்ற பெரும்பான்மையின் அடிப்படையில் செயற்குழுவில் இப்பொழுது இருக்கின்ற அமைப்புவிதிகளின்படி, கழக உறுப்பினர் கட்டணத்தை செலுத்தி,கிளைநடத்திய கூட்டங்கள், பிற நடவடிக்கைகளில் குறைந்தது 50% பங்கேற்றிருக்க வேண்டும் என்ற இரண்டு நிபந்தனைகளை மட்டுமே மாநில பொறுப்புக்கு போட்டியிட நிபந்தனைகளாக நிர்ணயிப்பது என்று முடிவெடுக்கப்பட்டது. தேர்தலை நடத்தும் குழுவிற்கு 1) பேரா.நடேசன், 2) பேரா.மகாலிங்கம் 3) பேரா.ஜூலியன் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். பேரா.சக்கரபாணி அவர்கள் தேர்தல் குறைதீர் நடுவராக செயல்படுவார். ‘சமன்செய்துசீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால் கோடாமை சான்றோர்க்கு அழகு” என்ற வள்ளுவர் மொழிக்கிணங்க இந்த சான்றோர்கள் தேர்தல் நடத்தி எதிர்காலத்தில் சங்கம் நல்ல முறையில் செயல்பட வழிவகுப்பார்கள் என வாழ்த்துகிறேன். வரும் காலங்களில் ஓய்வுபெற்ற கல்லூரி ஆசிரியர்களின் பிரச்சினைகளை தீர்ப்பதில் உறுப்பினர்கள் அனைவரும் ஒற்றுமையுடன் செயல்பட்டு சங்கத்தை வளர்ச்சிப்பாதையில் வழி நடத்திச் செல்லவேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். மூன்றாண்டு தொடர்ந்து உறுப்பினர் கட்டணம் செலுத்தியிருக்க வேண்டும், மற்றும் கிளை, கூட்டங்களில் அதன் செயல்பாடுகளில் 50% கலந்து கொண்டிருக்க வேண்டும் என்ற நிபந்தனை மட்டுமே ஆட்சிக்குழு தேர்தலுக்கு நிபந்தனை ஆகும்.

நன்றி

**எனது முகவரி :** 43/3, மஹால் 2வது தெரு, தோழமையுடன்,
மதுரை– 625001 **து.ந.கோகுல்நாத் பாபு,**
கைப்பேசி: 8428254243

## பொதுச்செயலர் கடிதம்

தருமபுரி
27.1.2020

இனிய பேராசிரியர்க்கு, வணக்கம்.

தமிழ்நாடு ஓய்வுபெற்ற கல்லூரி ஆசிரியர் கழகத்திற்கு ஏற்பட்ட இடையூறு நீங்கிடும் வண்ணம் மாநில செயற்குழு 25.1.2020 அன்று திருச்சியில் கூடி முடிவினை மேற்கொண்டது. இதன்மூலம் இவ்வியக்கத்தின் மாநில பொறுப்பாளர்கட்கான தேர்தல் நடைபெற உள்ளது. தேர்தல்குழு அப்பணியை மேற்கொள்ள உள்ளது. தமிழகத்தில் தற்போது ஊராட்சி அமைப்புகட்கான தேர்தல் நடைபெற்று பஞ்சாயத்து வார்டு தொடங்கி மாவட்ட ஊராட்சி மன்றத் தலைவர் வரை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். அடிப்படைவசதிகள் சாலை போன்றனசரியாக நிர்வகிக்க ஏதுவாக இருக்கும். கடந்த 3 ஆண்டுகள் அதிகாரிகள் செய்த நிர்வாகம் முடிவிற்கு வந்துள்ளது. இதனில் 50% பெண்கள் பங்கேற்பு என்பது பாராட்டத்தக்கது.

தேசிய குடியுரிமைச் சட்டம் குடிமக்கள் பதிவேடு மற்றும் மக்கள் தொகை கணக்கெடுப்பு என்ற சட்டங்கட்கு எதிராக நாடு முழுவதும் எதிர்ப்பு அலை பெருகியுள்ளதைக் காண்கிறோம். பல மாநிலங்களின் சட்டமன்றத்தில் இச்சட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாது எனத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஐரோப்பிய யூனியன் பாராளுமன்றத்தில் இவை தொடர்பான விவாதம் நடைபெற உள்ளது. வருகின்ற 1.2.2020 அன்று பாராளுமன்றத்தில் நிதி நிலை அறிக்கை சமர்ப்பிக்கப்பட உள்ளது. அதனில் நடுத்தரப் பிரிவினருக்கு பயனளிக்கும் அறிவிப்புகள் வருமா என ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர். ஓய்வூதியம் வருமானம் அல்ல என்பது நன்றாக தெரிந்திருந்தும் வருமானவரி விதிக்கப்பட்டு வருகிறது. வலது கையில் கொடுத்து இடது கை மூலம் பறிக்கும் செயலாக உள்ளது. எனவே ஓய்வூதியர்க்கு முழுமையாக வருமான வரியினின்று விலக்களிக்க வேண்டும் என்பது **AIFRUCTO**-வின் கோரிக்கையாக உள்ளது; இதனில் வெற்றி பெற விரும்புகிறோம்! தமிழ்நாடு அரசிடம் நமது நிறைவேறாத கோரிக்கைகள் நிலுவையில் உள்ளன. அதே போன்று 2006முதல் 2016 வரை ஓய்வு பெற்றவர்க்கான ஓய்வூதியத் திருத்த பட்டியலை நடுவண் அரசு வெளியிடாமல் உள்ளது. அதனை விரைவில் பெறுவோம்.

திருச்சியில் 25 1 2020 அன்று செயற்குழுவில் நிறைவேறிய தேர்தல் நடத்தும் தீர்மானம் நீதிமன்றத்தில் சமர்பிக்க வழக்கறிஞருக்கு 27 1 2020 அன்று அனுப்பப்பட்டது. 27 1 2020 அன்று தேர்தல் குழு அமைப்பாளர் மற்றும் உறுப்பினர்களுக்கு 25 1 2020 அன்று நிறைவேறிய தேர்தல் நடத்தும் தீர்மானம் விரைவு தபாலில் அனுப்பப்பட்டது. அதேபோன்று மேல்முறையீட்டு குழு உறுப்பினருக்கும் செயற்குழு தீர்மானம் விரைவு அஞ்சலில் அனுப்பப்பட்டது இனி தேர்தல் குழு தனது பணிகளைத் தொடரும்.

**எனது முகவரி :** 3/671 முதல் தெரு, ஜீவா நகர்,
கலெக்டரேட் (அஞ்சல்), தருமபுரி – 636705.
தொலைப்பேசி 04342 – 230397 செல் : 9443334397
E.Mail : perumalep@hotmail.com

வாழ்த்துக்களுடன்
தோழமையுள்ள
**இ.பி.பெருமாள்**
பொதுச்செயலாளர்





## மாநிலப் பொருளாளர் அறிக்கை - பிப்ரவரி - 2020

இனிய பேராசிரியர்க்கு, வணக்கம்.

நமது கழக உறுப்பினர்கள் அனைவருக்கும் இனிய நல்வாழ்த்துக்கள். நமது கழகத்தின் கிளைகளிலிருந்து ஜனவரி2020ல், பெறப்பட்ட உறுப்பினர்கட்டணம், செய்திமடல்நிதி, அறக்கட்டளை நிதி, கழக வளர்ச்சி நிதி, கட்டிட நிதி, AIFRUCTO ஆயுள்சந்தா மற்றும் ஆண்டுசந்தா பற்றிய விபரங்கள்.

**கோவை – நீலகிரி கிளைப்** பொருளரிடமிருந்து 2018–19க்கு ஒருவர், 2019–20க்கு 8 உறுப்பினர்கள் என 9 உறுப்பினர்களின் கட்டணம் ரூ.1350/ம், AIFRUCTO ஆயுள்சந்தா மூவருக்கு ரூ. 3000/ம் (m/s P. ஞான சௌந்தரி, D. ராஜேஸ்வரி, K. நடராசன்), AIFRUCTO ஆண்டுசந்தா 5 உறுப்பினர்களுக்கு ரூ.125/ம், கட்டிடநிதியாக 6 உறுப்பினர்களிடமிருந்து ரூ.31,000/ம் என ஆக மொத்தம் ரூ.35,475/– பெறப்பட்டுள்ளது. (தலா ரூ.5000 – m/s P. ஞானசௌந்தரி, D. ராஜேஸ்வரி, N. Earnest williams, S. வசந்தி, R.D. ராஜன், K. நடராசன் – ரூ.6000)

**கடலூர் கிளை** முன்னாள் செயலரிடமிருந்து 2019 - 2020க்கு 79 உறுப்பினர்களின் கட்டணம் ரூ.15,800/ம், AIFRUCTO ஆண்டுசந்தா 67 உறுப்பினர்களுக்கு ரூ.1675/ம், AIFRUCTO ஆயுள்சந்தா 4 பேருக்கு ரூ.4000/ம் என ஆகமொத்தம் ரூ.21,475/ம் பெறப்பட்டுள்ளது. (Dr. க.திருஞானம், சி.சரோஜா, என். சுப்ரமணியன், வி.வாசுதேவன்)

**தஞ்சாவூர் கிளைச்** செயலரிடமிருந்து 19ஆவது மாநாட்டு பங்களிப்புத் தொகை கழக வளர்ச்சி நிதிக்கு ரூ.5000/ம், மாநாட்டு மலரிருந்து அறக்கட்டளை நிதிக்கு ரூ1,00,000/ம், என ஆகமொத்தம் ரூ.1,05,000/ம் பெறப்பட்டுள்ளது.

**குடியாத்தம் கிளைப்** பொருளரிடமிருந்து 2019–20க்கு ஒரு புதிய உறுப்பினரின் கட்டணம் ரூ.150/ம், செய்திமடல் நிதியாக ரூ.200/ம், AIFRUCTO ஆண்டுசந்தா ரூ.25/ம் என ஆகமொத்தம் ரூ.375/– பெறப்பட்டுள்ளது. (Mrs.P.Kokila)

**விருதுநகர் கிளைச்** செயலரிடமிருந்து 2019–20க்கு AIFRUCTO ஆயுள்சந்தா ரூ.1000/ம், பேரா. B. சதாசிவன் அவர்களுக்காகப் பெறப்பட்டுள்ளது.
கரூர் கிளைப் பொருளரிடமிருந்து 2019–20க்கு 16 உறுப்பினர்களின் கட்டணம் ரூ.2400/ம், AIFRUCTO ஆண்டுசந்தா 12 உறுப்பினர்களுக்கு ரூ.300/ம் என ஆகமொத்தம் ரூ.2700/– பெறப்பட்டுள்ளது.

**இராமநாதபுரம் கிளைப்** பொருளரிடமிருந்து 2019–20க்கு 4 உறுப்பினர்களின் கட்டணம் ரூ600/ம், செய்திமடல் நிதியாக 2 புதிய உறுப்பினர்களிடமிருந்து ரூ.400/ம், AIFRUCTO ஆண்டுசந்தா 4 உறுப்பினர்களுக்கு ரூ.100/ம், என ஆகமொத்தம் ரூ.1100/– பெறப்பட்டுள்ளது.

**ஈரோடு கிளை** முன்னாள் பொருளரிடமிருந்து 2019–20க்கு 4 உறுப்பினர்களின் கட்டணம் ரூ.600/– பெறப்பட்டுள்ளது.

**சென்னை கிளைப்** பொருளரிடமிருந்து 2019-2020க்கு 30 உறுப்பினர்களின் கட்டணம் ரூ. 4500/ம், AIFRUCTO ஆயுள்சந்தா 6 உறுப்பினர்களிடமிருந்து ரூ.6000/ம், (Dr. Rani Christhu Dhas, Dr.R.Leela Abraham, Dr.A. Jayabharathi, Dr. K. Karuppan. Dr.S. Karpagavinayagam, Dr.S. Bharathi), அறக்கட்டளை நிதியாக 6 உறுப்பினர்களிடமிருந்து ரூ.3000/-ம், கழக வளர்ச்சி நிதியாக 6 உறுப்பினர்களிடமிருந்து ரூ.3000/ம், (M/s T. Senguttuvan, K. Karunakaran, S. Nagarajan, Dr.V.Swaminathan, Dr.Usha Raghotham, G. Jesudurai), கட்டிட நிதியாக 10 உறுப்பினர்களிடமிருந்து ரூ.36,000/ம் என ஆக மொத்தம் ரூ.52,500/- பெறப்பட்டுள்ளது. (M/s G. அமுதவள்ளி – 5000, M.Vaidyanathan - 2000/ P. மீராபாய் – 3000, R.Babuchi - 3000, S. மதியழகி – 3000, Lalitha Govindan - 4000, G. Subramanian - 4000, K. Karuppan - 4000, S. Karpaga vinayagam - 4000, Parvathi Gopalan - 4000)

**செய்யாறு கிளைப்** பொருளரிடமிருந்து 2020 - 2021க்கு 33 உறுப்பினர்களின் கட்டணம் ரூ.4950/ம், 2019-2020க்கு Dr.G. மணி என்பவரிடமிருந்து AIFRUCTO ஆயுள்சந்தா ரூ.1000/ம், அறக்கட்டளை நிதியாக ரூ.500/ம், கழக வளர்ச்சி நிதியாக ரூ.500/ம், என ஆகமொத்தம் ரூ. 6950 பெறப்பட்டுள்ளது.

**திண்டுக்கல் கிளைப்** பொருளரிடமிருந்து 2019-2020க்கு கட்டிட நிதியாக தலா ரூ. 5000/- வீதம் 10 உறுப்பினர்களுக்கு ரூ.50,000/-ம் பெறப்பட்டுள்ளது. (Tmt.K. Mahalakshmi, Tmt.H. Vasantha, Tmt. S.P. Lakshmi, Tmt.R. Jayapradha devi, Tmt.P. Chandralekha, Dr.S.Mangalavathi Gabriel, Tmt.N. Manomani, Tmt.S. Anandam, Tmt.R. Kasthuri, Mr.K. Sivasubramanian)

**உடுமலைப்பேட்டை கிளைச்** செயலரிடமிருந்து 2019-2020க்கு AIFRUCTO ஆயுள்சந்தா 36 உறுப்பினர்களுக்கு ரூ. 36,000/-ம் பெறப்பட்டுள்ளது. (Prof.M.R. Velusamy, Ms. S. Lakshmiyammal, Prof.Dr.A. Chokkappan, Prof.N. Anandha Parameshwari, Prof.Dr. D. Anusuya, Prof.B.S. Annalakshmi, Prof.K.N. Bhuvaneshwari, Prof. K.Bhooma, Prof.K. Chinthamani, Prof.H.C. Hemakumari, Prof.G. Jayakumari, Prof.Dr.N.Jeyanthi, Dr.A.L. Kamalavalli, Prof.Dr.R. Lalithabai, Prof.Meeradevi, Prof.Dr.R. Meera, Prof.Dr. J. Manjula, Prof.R. Pusbharani, Prof.M. Pankajavalli,Prof.U. Ramani, Prof.G. Ramani, Prof.S. Rajamani, Prof.G. Ragini Devi, Prof.V.P. Soundariya, Prof.R. Sulochana, Ms.N. Seeniyammal, Prof.Pon Selva Meena, Prof.K. Shankunthala, Prof.U. Thailambal, Prof.Dr.A.R. Thilagavathi, Prof.M. Thamilselvi, Prof.A. Varadha Sundari Ponnuthai, Prof.M. Vanmathi, Prof.G.S. Vidyalakshmi, Mrs. B. Vedhavally Sridharan, A.L. Maragathavalli)

**கட்டிட நிதி:**

| | |
|---|---|
| 12/2019 மாதம் வரை கட்டிட நிதி | : ரூ. 35,42,875 |
| 1/2020 மாதம் பெறப்பட்ட நிதி | : ரூ. 1,17,000 |
| ஆக மொத்தம் | : ரூ. 36,59,875 |





தஞ்சாவூர் மாநில மாநாட்டில் அறக்கட்டளை நிதி உதவி பெற்ற கீழ்க்கண்ட கிளைகள் பெற்ற தொகைக்கான அசல் ரசீதுகளை அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். 1. மயிலாடுதுறை, 2. செய்யாறு, 3. மதுரை, 4. கும்பகோணம். 2019-2020க்குரிய சந்தா தொகையைப் பெற்று அனுப்புமாறும், புதிய உறுப்பினர்களிடமிருந்து அறக்கட்டளைநிதி, கழக வளர்ச்சிநிதிகளைப் பெற்று அனுப்புமாறும் கேட்டுக் கொள்கிறேன். தங்களது தொகைகளை அனுப்ப வேண்டிய முகவரி:- இந்தியன் வங்கி, திருவானைக் கோவில், திருச்சி. **S.B A/c No: 935236819. IFSC Code: IDIB 000S110.**

**எனது முகவரி :** 3/175, G.R.T. நகர், திருவாரூர் - 610 001. செல் : 9443976222
E.mail : indirabalu1@gmail.com

அன்புடன்
பேரா.**M.பாலசுப்பிரமணியன்**
மாநிலப் பொருளர்

**தமிழ்நாடு ஓய்வு பெற்ற கல்லூரி ஆசிரியர் கழகம்**

**பதிவு எண் 236/2000**

தருமபுரி.
26.1.2020

**சுற்றறிக்கை 1/20**

இனிய பேராசிரியர்க்கு! வணக்கம்.

தமிழ்நாடு ஓய்வு பெற்ற கல்லூரி ஆசிரியர் கழகத்தின் மாநில செயற்குழுக் கூட்டம் 25.1.2020 அன்று காலை 11.00மணிக்கு திருச்சி அருண் ஹோட்டல் மினி ஹாலில் தொடங்கி நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு மாநிலத் தலைவர் முனைவர் டி.என்.கோகுல்நாத்பாபு தலைமை தாங்கினார். மாநில செயற்குழு உறுப்பினர்களை திருச்சி கிளையின் செயலாளர் பேரா. அப்பாவு வரவேற்றார். இதன்பின் சென்ற செயற்குழுவிற்கு பின் மறைவெய்திய கீழ்கண்ட பேராசிரியர்களுக்கு மௌன அஞ்சலி செலுத்தி இரங்கல் தீர்மானம் நிறைவேறியது.

| | | |
|---|---|---|
| மதுரை | : | பேரா. சுமுகா, பேரா. பி.டி. செல்லப்பா<br>பேரா.ஆர்.எஸ். ரெங்கராஜன், பேரா.கலைதாசன்<br>பேரா.ஸ்ரீபதி |
| சேலம் | : | பேரா. ஆர்.இராதா. |
| திருச்சி | : | பேரா. ஏ.நாகரத்தினம், பேரா.ஆர்.நடராஜன். |
| ஈரோடு | : | பேரா. எ.கே. சுப்ரமணியன், பேரா.எஸ். கந்தசாமி,<br>பேரா.கே. காளியண்ணன். |
| கன்னியாகுமரி | : | பேரா. பி.ஜஸ்டின் சுந்தரதாஸ்,<br>பேரா.கே. வினாயகமூர்த்தி. |
| தருமபுரி | : | பேரா. என்.கோவிந்தராஜன். |
| காஞ்சிபுரம் | : | பேரா.பி.பி.சுப்ரமணியசா. |
| கோவை | : | பேரா.ஆர். முகுந்தன், பேரா.எஸ். சுப்புலட்சுமி,<br>பேரா. பி.என். பாலகிருஷ்ணன். |

| | | |
|---|---|---|
| சிதம்பரம் | : | பேரா. ஜனாப் எச்அமீர்அலி, பேரா. டி.இராமசாமி. |
| விருதுநகர் | : | பேரா. ஜி.சிவசுப்ரமணியன், பேரா. சி.சோமசுந்தரம். |
| பரமத்திவேலூர் | : | பேரா. ஆர். சின்னசாமி. |
| தஞ்சாவூர் | : | பேரா. சோமசுந்தரம். |
| மயிலாடுதுறை | : | பேரா. ஏ.கலியபெருமாள். |
| சென்னை | : | பேரா. கே.ஜெயலட்சுமி. |
| பழனி | : | பேரா.எஸ். அருணாசலம். |
| திருவாரூர் | : | பேரா.எம். ராஜாங்கம். |
| கடலூர் | : | பேரா. ஆர். அமிர்தலிங்கம். |

செயற்குழு உறுப்பினர்கள் தங்களை அறிமுகம் செய்துகொண்டனர். இதன்பின்னர் தலைவர் தலைமையுரையாற்றினார். பின்னர் பொதுச்செயலாளர் இயக்க நடவடிக்கைகள் பற்றிய அறிக்கையையும் தேர்தல் குழு அமைப்பாளர் தேர்தல்குழு ஆற்றிய பணியினையும் கூறினர். பொதுச்செயலாளர் நீதிமன்றம் செல்ல நேரிட்டதையும் அதன் ஆலோசனையையும் விவரித்தார். பின்னர் விவாதங்கள் நடைபெற்று பின்வரும் தீர்மானங்கள் நிறைவேறின.

1. மூன்று ஆண்டுகள் முடிந்ததும் தேர்தல் நடைபெறாவிட்டால் மாநில செயற்குழு மாநில மற்றும் கிளைகளின் நிர்வாகிகளின் பதவிக்காலத்தை மூன்று மாதம் முதல் ஆறுமாதம் வரை நீட்டிக்காலம் என்று அமைப்பு விதியில் உள்ளது. அதன் அடிப்படையில் தற்போதுள்ள மாநில ஆட்சிக்குழு பொருப்பாளர்கள் பொறுப்பில் நீட்டிக்க மாநில செயற்குழு அதிகாரமளிக்கிறது.
2. தற்போது அமைப்பு விதியில் கிளை மற்றும்மாநிலத் தேர்தல்களில் போட்டியிடத் தகுதிகள் கழக உறுப்பினர் கட்டணத்தை செலுத்தி, கிளை நடத்திய கூட்டங்கள், பிற நடவடிக்கைகளில் குறைந்தது 50% பங்கேற்றிருக்கவேண்டும் என்பதைக் கொண்டு தேர்தல் நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது.
3. பேரா.இரா.நடேசன் (முன்னாள் நாமக்கல் கிளைத்தலைவர்)இ முனைவர் எஸ்.ஜுலியன் (முன்னாள் திருச்சி கிளைத்தலைவர் மற்றும் மாநிலத் துணைத்தலைவர்) முனைவர் கு.மகாலிங்கம் (திருவண்ணாமலை கிளைச்செயலாளர்) ஆகியோர் மாநிலப்பொருப்பாளர்கட்கான தேர்தலை எதிர்வரும் மார்ச் 31-க்குகள் நடத்தித்தர வேண்டுவதெனவும் பேரா.இரா.நடேசன் அமைப்பாளராக செயலாற்ற வேண்டுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.
4. தேர்தல் முறையீடுகளை பரிசீலித்து தீர்ப்பு வழங்க மேல்முறையீட்டுக்குழு உறுப்பினராக முனைவர் எம்.சக்ரபாணி (கோவை – நீலகிரி கிளைத்தலைவர்) செயலாற்ற வேண்டுவதெனத் தீர்மானிக்கப்பட்டது.
5. **AIFRUCTO** மாநாடு தமிழ்நாட்டில் நடத்தித்தரவேண்டுமென **AIFRUCTO** பொதுச்செயலாளர் வேண்டுகோள் பற்றி விவாதிக்கப்பட்டது. தற்போது அமைப்பின் தேர்தல் நடைபெறுவதால் தற்போதைய பொறுப்பாளர்கள் இதன் தொடர்பாக சம்மதம் எதுவும் தெரிவிக்க இயலாது என்று தீர்மானிக்கப்பட்டது.
6. தமிழ்நாடு ஓய்வுபெற்ற கல்லூரி ஆசிரியர் கழகத்தின் 19-வது மாநில மாநாட்டினை 28.9.2019 அன்று சிறப்பாக நடத்திய தஞ்சாவூர் கிளையின் செயலாளர் முனைவர் வே.இராமசாமி மாநாட்டின் வரவு–செலவு அறிக்கையை படித்தார். அறக்கட்டளைக்கு ஒரு இலட்சத்தி ஆறாயிரம் தொகையும், வளர்ச்சி – நிதிக்கு ஆறாயிரம் தொகையும் நிதியளித்ததற்கு செயற்குழு பாராட்டுகிறது. அறிக்கையை செயற்குழு ஏற்றுக்கொள்வதெனத் தீர்மானிக்கிறது.
7. மயிலாடுதுறை கிளையின் முன்னாள் செயலர் மற்றும் தற்போது துணைத்தலைவராக உள்ள முனைவர் எஸ்.முருகேசன் அவர்கட்கு சிறந்த மொழிப்பெயர்ப்பாளருக்கான தமிழக அரசின் விருது பெற்றதற்கு இச்செயற்குழு வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறது. இறுதியில் மாநிலத்துணைத்தலைவர் முனைவர் ந.மாரிசாமி நன்றி கூறினார்.





வாழ்த்துக்களுடன், தோழமையுடன்

**(இ.பி. பெருமாள்)**

பொதுச்செயலாளர்

## கிளைச் செய்திகள்

### MAYILADUTHURAI

The monthly meeting of TANRECTA was conducted on Sunday the 12th January 2020 at 11 AM in Arivalayam School, Mayiladuthurai. Prof.R.Gnanasekaran presided over the meeting. Homage was paid to the death of Prof.Dr.A.Kaliyaperumal, former HOD of Tamil, A.V.C. College, who died on 11th December, 2019.

Following president's briefing about the election of central office bearers, discussion took place on what had happened with regard to the said election like nomination, rejection of nomination, litigation and court's advice to the parties in the litigation. Prof.D.Antony Durairaj, Prof.S.Sivaraman, Prof.R.Viswanathan and others participated in the discussion. They found fault with all people who were responsible for dragging the matter to the court and litigation which was avoidable for senior people like us. After elaborate discussion the unit passed the following resolutions unanimously.

**Resolutions :**

1. Resolved to request the central executive council to conduct the election for 2020-2022 to the central office bearers as per the existing byelaws dated : 01.04.2016.
2. Resolved to request the executive council to postpone to the future any amendment proposal to the existing byelaws.
3. Resolved to depute any office bearer of the unit or even any member of the unit to participate in all the meetings of the executive council in the absence of the secretary on valid grounds. Further, by way of celebrating the 95$^{th}$ birthday of our patriarch Prof.Narasingam our member Prof.R.Viswanathan (Physics) gave a sumptuous tea to the gathering. At the end Mr.M.Karunanidhi, Joint-Secretary proposed the vote of thanks.

**S.Murugesan,**
Vice President, Mayiladuthurai.

### DINDIGUL UNIT

The meeting. of Dindigul unit of TANRECTA was conducted on 13.01.2020 in the residence of Prof.Jayapradhadevi. The president Prof. Sivasubramanian welcomed the gathering. We passed the following resolution.” The election of the state level office bearers should be based on the by law of TANRECTA”. The meeting came to an end with the vote of thanks proposed by Dr. R. Mummatchi, The secretary of our unit. Thank you With regards

Dr. **R. Mummatchi,**
Secretary, Dindigul Unit.





### TOOTHUKUDI UNIT

The first meeting of the New Year was held on Saturday 11th January, around 4P.M. at Prof. Edison’s house in Thoothukudi. The unit president Prof. Jeyasingl welcomed the members by wishing them all a very happy New Year. The members condoled the deaths of three of our senior members who had passed away in the past three weeks. Prof. M. P. Gurusamy, Retd. Principal Aditanar College, Thiruchendur, passed away on 25th December 2019 at Dindigul. Prof. John Gabriel, Retd. Principal, Margoschis College, Nazareth, passed away at Palayankottai on 27th December 2019. Both were aged 82. Prof. Alphonse Rajendran, Retd. H.O.D. Dept. of Maths. Aditanar College, Thiruchendur and former controller of examinations, M.S. University, Tirunelvelli passed away on 8th, January 2020 at Tiruchendur. He was aged 77. Many of our unit members along with some of the office bearers paid their last respects to all the three in the respective places.

Prof. E. Manoharan, who was an old student of Prof. Gurusamy, recalled the excellent qualities of him as a prolific writer and as an able administrator. Prof. Kasirajan who spoke about Prof. John Gabriel remembered him as a strict disciplinarian under whose leadership the college functioned smoothly without disruptions. Prof. Alexander kanagaraj told that Prof. Alphonse Rajendran was an excellent teacher and was very helpful to those in need. Afterwards two minutes silence was observed in respect of the departed souls.

Out Secretary, Prof. Kamalraj had expressed his inability to attend the meeting due to his illness and subsequent surgery in his foot. The members expressed their concern and wished him speedy recovery. The members discussed the issues related to the election to be held for the central office bearers and the following resolutions was passed. Payment of membership fee without arrears and 50% attendance in the unit meetings should be the only criteria for eligibility for candidates to the General secretary and the Central Unit. The members thanked Prof. Jeyasing for providing tea and snacks during the meeting. The next meeting of the unit will be held on Tuesday 11th February at the same venue. The meeting came to a close with Prof. Immanuvel proposing a vote of thanks.

Prof. **M. Kamalraj,**
Secretary, Thoothukudi Unit.

### PUDUKKOTTAI UNIT

The general body met on 12/1/20 with Prof.M.Srikumar in the chair. The following resolutions were adopted.

1) The unit wished the following professors who celebrate their birthdays this month W.S Henry chellappa, Dr. M.Santhosh babu, V.Vembaiyan, C.Shauga vadivelu and Dr.P.Chandrasekaran, happy and long life.

2). The unit resolves that the election of central unit office bearers should be conducted as per existing bye laws only. Prof.A.Ramachandran and Prof.Dr.M.Santhoshbabu shared their happiness by providing a tea party. Prof. S.Viswanathan proposed vote of thanks.

**G.Manivannan,**
Secretary, Pudukkottai Unit.

**PARAMATHI VELUR UNIT**

The meeting of the General Body held on 11.01.2020 at 6.30 PM at Hotel South Indian Residency. The Secretary after briefing the activities of the TANRECTA both at Chennai and New Delhi, clarified the doubts raised by the members regarding the statement of income tax to be submitted to the Sub-Treasury, Paramathi and the deductions that are allowed under various sections. The secretary elaborately explained the incidents taken place with reference to the State Office Bearers Election. The members participated in the discussions and the Unit unanimously decided that the State Office Bearers election should be conducted only after the revision and registration of the Bylaws of the TANRECTA.

Prof. D. Amalraj wrote and handed over a letter to the President thanking all the members and office bearers for their support and help during his membership in this Unit. He has also mentioned about his inability to attend the meetings due to his health problem.

Our Senior Professor, Sri. K. M. Mathivanan celebrated his Birth Day in this month and Prof. Anbalagan became Grand Father. All the members present congratulated both of them for a long, healthy and happiest life. The Dinner was hosted by Prof. K. Mathivanan independently and he was thanked by all the members. **The next meeting will be held on 8th Februrary 2020 at the same time and at the same Venue.**

DR. **T.P.J. BHARATHI**
Secretary, Paramathi Vellur

## தஞ்சாவூர் கிளை

எமது கிளையின் பொதுக்குழுக்கூட்டம் 11.01.2020 சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு தஞ்சாவூர் ஹோஸ்ட் லயன் சங்கத்தின் பொன்விழா அரங்கில் நடைபெற்றது. இக் கூட்டம் மூன்றாவது ஆண்டு சிறப்புக் கூட்டமாக நடைபெற்றது. கூட்டத்திற்கு 75 உறுப்பினர்கள் வந்திருந்தனர். கிளைத் தலைவர் பேரா. ஆ. இராமகிருஷ்ணன் கூட்டத்திற்கு தலைமை வகித்து நடத்தினார். முதற்கன் 19.12.2019 அன்று இயறக்கையெய்திய மூத்தபேராசிரியரும் எமது கிளையின் முன்னாள் செயலாளருமாகிய பேரா. பி. சோமசுந்தரம் அவர்களுக்கு அஞ்சலி





செலுத்தப்பட்டது. பி.எஸ். என்று அன்புடன் அழைக்கப்பட்ட பேரா. பி. சோமசுந்தரம் அவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட பேராசிரியர்கள் க. வைத்தியநாதன், என். வெங்கடேசன், வே. இராமசாமி, ஆ. இராமகிருஷ்ணன் மற்றும் மாநிலப் பொருளாளர் பேரா. எம். பாலசுப்ரமணியன் ஆகியோர் மறைந்த பேராசிரியரின் உழைப்பு மற்றும் நற்குணங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

பின்னர் கிளைச்செயலாளர் முனைவர் வே. இராமசாமி அவர்கள் கடந்த 2019 ஆம் ஆண்டில் கிளையின் செயல்பாடுகள் பற்றியும் 28.09.2019 ஆம் நாளில் தஞ்சையில், கிளை முன்னின்று நடத்திய 19–வது மாநில மாநாடு பற்றியும் எடுத்துரைத்தர். விழாவில் பங்கெடுத்துக்கொண்ட மாநிலப் பொதுச்செயலாளர் பேரா. இ.பி. பெருமாள் அவர்கள் பேராசிரியர் சோமசுந்தரம் அவர்களைப்பற்றி நினைவு கூர்ந்து பேசினார். பின்னர் TANRECTA – வின் பல்வேறு ஆக்கப் பணிகளைத் தொகுத்து உரையாற்றினார். தஞ்சைக் கிளையின் சிறப்பான செயல்பாடுகளைப் பாராட்டினார். மாநிலப் பொருளாளர் பேரா. எம். பாலசுப்ரமணியன் மற்றும் கிளைத் துணைத்தலைவர் பேராசிரியர் கு. ஏகநரேந்திரன் ஆகியோர் வாழ்த்திப் பேசினார்கள்.

மாநிலப் பொதுச் செயலாளர் மற்றும் மாநிலப் பொருளாளர் ஆகியோருக்கு கிளையின் சார்பாக நினைவுப்பரிசு வழங்கப்பட்டு பொன்னாடை போர்த்தப்பட்டது. பின்னர் சிறப்பு விருந்தினர், தஞ்சை நகரத்தின் மூத்த, முன்னோடி அறுவைச் சிகிச்சை மருத்துவர், டாக்டர் எம்.ஜி. ஆர் மருத்துவப் பல்கலைக்கழகத்தின் வருகை நிலை பேராசிரியர் டாக்டர் சு. நரேந்திரன் அவர்கள் சிறப்புரையாற்றினார்கள். உடல் நலம் பேணுதல், நடைப்பயிற்சி மேற்கொள்ள வேண்டியதன் அவசியம், உணவுக்கட்டுப்பாடு ஆகியவான பற்றி மிக அருமையாகவும் எளிமையாகவும் உறுப்பினர்களிடம் எடுத்துரைத்தார். அவருக்கு கிளையின் சார்பாக மாநிலப் பொதுச் செயலாளர் அவர்கள் பொன்னாடை போத்தி நினைவுப் பரிசு வழக்கினார்.

**பிறந்தநாள் வாழ்த்து :** பின்னர் ஜனவரித்திங்கள் பிறந்தநாள் காணும் பேராசிரியர்கள் ஆர். என். மாதவன், ஆர். சேகரன், ஏ.பி.எஸ். பால்ராஜ், டி. ஜோசப் பாண்டியன், கே. இராஜேந்திரன், வி. கோவிந்தராஜன், சிசிலியா பாண்டியன், தையநாயகி வி. நடராஜன் ஆகியோருக்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவிக்கப்பட்டது. கூட்டத்திற்கு வருகை தந்த பேராசிரியர்கள் ஆர். என். மாதவன், ஏ.பி.எஸ். பால்ராஜ், கே. இராஜேந்திரன், வி. கோவிந்தராஜன் மற்றும் சிசிலியா பாண்டியன் ஆகியோருக்கு கிளையின் சார்பாக பொன்னாடை போர்த்தப்பட்டது. கிளைப் பொருளாளர் பேரா. ப. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே முடிவுற்றது. கூட்டத்திற்குப் பின் சிறப்பான மதிய உணவு வந்திருந்த உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது.

மதியம் 2 மணிக்கு கிளையின் பொதுக்குழுக்கூட்டம் நடைபெற்றது. கிளைச் செயலாளர் பொதுக்குழுவின் காரணம் பற்றி விளக்கிக் கூறினார். 25.01.2020 ல் நடைபெறவுள்ள மாநிலச் செயற்குழுவிற்கு கிளையின் தீர்மானங்களின் தேவை பற்றி விளக்கினார். உறுப்பினர்கள் பங்கேற்றுப் பேசினார்கள். பின் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. வேதியியல் பேராசிரியரும் தஞ்சைகிளையின் முன்னாள் செயலாளருமாகிய பேரா.பி. சோமசுந்தரம் அவர்களின் மறைவிற்கு (19.12.2019) தஞ்சைக் கிளை உறுப்பினர்கள் ஆழ்ந்த வருத்தத்தையும் இரங்கலையும் தெரிவிக்கின்றனர். அவரது பிரிவால் வாடும் குடும்பத்தார்கள், உறவினர்கள் மற்றும் நணபர்களுக்கு அனுதாபங்கள் தெரிவிக்கப்படுகிறது.
2. கழக அமைப்பு விதிகளின்படி, மாநிலத் பொறுப்பாளர்கள் தேர்தலை நடத்த வேண்டும். தேர்தலில் போட்டியிட உறுப்பினர் கட்டணம் செலுத்தியிருந்தாலே போதுமானது. பிற நிதிகளை தேர்தலுடன் இணைக்கவேண்டியதில்லை.
3. 25.01.2020 அன்று நடைபெறவுள்ள மாநில செயற்குழுவிற்கு தவிர்க்க இயலாத காரணங்களால் கிளைச்செயலாளர் கலந்து கொள்ள இயலவில்லையாயின் பொதுக் குழுவின் அனுமதி பெற்ற கிளையின் வேறு பொறுப்பாளர்களின் ஒருவர் கலந்து கொள்ள அனுமதிக்க வேண்டும்.

பேரா. **வே. இராமசாமி,**
செயலாளர், தஞ்சாவூர் கிளை.

## திருவாரூர் கிளை

திருவாரூர் கிளையின் பொதுக்குழு கூட்டம் 06.01.2020 அன்று திங்கட்க கிழமை மாலை 6.30 மணி அளவில் கிளைத் தலைவர் பேரா.R.நாராயணசாமி அவர்கள் தலைமையில் அவரது இல்லத்தில் நடைபெற்றது. கிளை தலைவர் அவர்கள் அனைவரையும் வரவேற்று இயக்க நடவடிக்கைகளைப் பற்றி எடுத்துரைத்தார். 25.01.2019 அன்று நடைபெற உள்ள மாநில செயற்குழு கூட்ட சுற்றறிக்கையும், தேர்தல் நிறித்திவைக்கப்பட்டதற்கான காரணங்கள் மற்றும் நீதிமன்ற தீர்ப்பின் விவரங்கள் பற்றிய கடிதமும் பொதுக்குழுவில் வாசிக்கப்பட்டது. மாநில பொருளாளரான M.பாலசுப்ரமணியன், கிளைத்தலைவர் பேரா.R.நாராயணசாமி, கிளைச் செயலரும் தேர்தல்குழு அமைப்பாளருமான பேரா.S.கனகசுந்தரம் ஆகியோர் நடைபெற இருந்த தேர்தலில் தள்ளி வைக்கப்பட்டதற்கான காரணங்களை விரிவாக விளக்கி பேசினர். தேர்தல் பிரச்சனை தொடர்பாக உறுப்பினர்களும் தங்க எது கருத்துக்களை தெரிவித்து இறுதியாக கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 'புதிய விதிகளின்படி தேர்தல் நடத்தப்பட வேண்டும். அதற்கு ஏற்ப செயற்குழு பொதுக்குழு கூட்டங்களை நடத்தி அமைப்பு விதிகளில் திருத்தம் செய்து தேர்தலை நடத்த வேண்டும்". அனைவருக்கும் கிளைத்தலைவர் பேரா.R.நாராயணசாமி அவர்கள் சிற்றுண்டி வழங்கி சிறப்பித்தார் அனைவருக்கும் புத்தாண்டு மற்றும் பொங்கல் வாழ்த்து தெரிவிக்கபட்டது. பொருளாளர் பேரா.R.ரெங்கராஜுலு அவர்கள் நன்றி தெரிவிக்க கூட்டம் நிறைவுப் பெற்றது. 10.1.2020 எங்களது கிளை உறுப்பினர் பேரா. M. ராஜாங்கம் அவர்கள் இன்னுயிர் எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரா.**S.கனகசுந்தரம்**
செயலர், திருவாரூர் கிளை





## திருச்சி கிளை

11.01.2020 சனிக்கிழமை மாலை 5 மணியளவில் திருச்சி, தில்லைநகர், கி.ஆ.பெ. மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் இக்கிளையின் பொதுக்குழுக் கூட்டம் கிளைத்தலைவர் முனைவர் ந. செல்லையா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கிளை இணைச்செயலர் பேரா. கு. கண்ணன் வரவேற்புரையாற்றினார். திருச்சிராப்பள்ளி பெரியார் ஈ.வெ.ரா கல்லூரி முன்னாள் தமிழ்த்துறை பேராசிரியர் திரு. கு. ப. கணேசன் அவர்களின் துணைவியார் திருமதி. க. பிரபா கணேசன் மற்றும் இக்கிளையின் பொதுக்குழு உறுப்பினர் பேரா. ஆறுமுகம் அவர்களின் சகோதரர் Er திரு. R. வெங்கட்ராமன் **(Ex - Eng - Railway)** ஆகியோரின் மறைவிற்கு 1 நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

நமது கழகத்தின் பொதுச்செயலாளர் மாநிலப் பொருளர் பேரா. இ.பி. பெருமாள், பேரா. M. பாலசுப்பிரமணியன் ஆகியோர் பொதுக்குழு கூட்டத்தில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர். மாநிலப் பொருளாளர் கழகத்தின் நிதிநிலைப்பற்றி எடுத்துரைத்தார். பொதுச்செயலாளர் TANRECTA இதழ் வெளியிடுவதற்கே மாதந்தோறும் சராசரியாக ரூ.40,000/- செலவாகிறது எனவும், உறுப்பினர்கள் செலுத்தவேண்டிய நிதிகளை, கழகத்தின் வளர்ச்சி கருதி செலுத்தவேண்டுமென கேட்டுக் கொண்டார். பொதுச் செயலர் உள்ளிட்ட மாநிலப் பொறுப்பாளர்கள் அலுவல் நிமித்தமாக விமானத்திலோ அல்லது காரிலோ பயணமேற்கொண்டாலும் உரிய விதிகளின்படி பேருந்து கட்டணத்தை மட்டுமே பயணப்படியாக பெற்றுக் கொள்வதாகவும் கூறினார். உறுப்பினர்களின் சந்தேகங்களுக்கு உரிய விளக்கமளித்தார். பொதுச்செயலரும், மாநிலப்பொருளாளரும் உறுப்பினர்களிடம் விடைபெற்றுச் சென்ற பிறகு கூட்டம் தொடர்ந்து நடைபெற்றது. தற்போதைய அமைப்பு விதிகளின்படி மாநிலப் பொறுப்பாளர்களுக்கான தேர்தல் நடத்தப்படவேண்டுமெனவும், இவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் புதிய பொறுப்பாளர்கள் பொதுக்குழுவை கூட்டி அமைப்புவிதிகளில் உரிய திருத்தங்களை செய்து கொள்ளலாம் எனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பிறந்த நாள் காணும் பேராசிரியர்களுக்கு உறுப்பினர்கள் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்ட பிறகு கூட்டம் இனிதே நிறைவுபெற்றது. **கிளையின் அடுத்த மாதாந்திரக் கூட்டம் 08.02.2020 சனிக்கிழமை மாலை 5 மணியளவில் கி.ஆ.பெ. மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெறும்** எனவும், உறுப்பினர்கள் அனைவரும் கூட்டத்தில் கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டும் எனவும் அன்புடன் வேண்டப்படுகிறது.

பேரா **சி. அப்பாவு**
செயலர், திருச்சிக் கிளை

## திருவண்ணாமலை கிளை

எமது கிளையின் பொதுக்குழுவானது கிளைத் தலைவர் பேரா. எ. தாமஸ் அவர்களின் தலைமையுரையுடன் நடைபெற்றது. களியாக்காவிளை சிறப்பு காவல் துணை கண்காணிப்பாளர் திரு. வில்சன், எல்லையோர இராணுவ வீரர்கள் ஏனைய கிளை உறுப்பினர்கள் ஆகியோரின் இறப்பிற்கு இரங்கல் தெரிவித்து இரு

நிமிட மௌனம் மேற்கொள்ளப்பட்டது. இம்மாதம் பிறந்தநாள் கண்ட பேராசிரியர்கள் இரா. செல்வசேகரன் மற்றும் கு. முத்துராசன் ஆகியோர் வளமும், நலமும் பெற உறுப்பினர்கள் கரவொலி மூலம் வாழ்த்துக்களைக் கூறினர். இயக்க நடவடிக்கைகள் குறித்து செயலர் விளக்கினார். மாநில தேர்தல் குறித்தும், அதனைத் தொடர்ந்து இயக்கத்தின் நடவடிக்கைகள் குறித்து சமூக வலை தளங்கள், கடிதம் வாயிலாக ஏற்பட்ட வாத, பிரதிவாதங்கள் குறித்தும் உறுப்பினர்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர். கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. 22.12.2019 ல் நடைபெற்ற பொதுக்குழுவின் முடிவுபடி 19.01.2020 ல் நடைபெற்ற கிளைப் பொதுக்குழுவானது மாநில தேர்தலை பழைய சங்க அடிப்படை விதிகளின் படி நடத்த கோருகிறது.
2. இயக்கம் தன் பணிகளைச் சரிவரசெய்ய நிதி அவசியம் எனவே பேராசிரியர் நரசிங்கம் அறக்கட்டளை நிதி, சங்க வளர்ச்சி நிதி போன்றவற்றை அனைத்து உப்பினர்களும் செலுத்திட வேண்டும். குறிப்பாக கிளை, மாவட்டம், மாநிலம் அளவில் பொறுப்பாளர்களாக வர விரும்பும் தோழர்கள் கண்டிப்பாக உறுப்பினர் கட்டணத்துடன் மேற்கண்ட நிதிகளை அளித்திருக்க வேண்டும்.
3. இயக்க நடவடிக்கைகள் குறித்து பொதுவழியில் கருத்துக்களை கூறுவதை எமது கிளை வருத்தத்துடன் வன்மையாகவும் கண்டிக்கிறது. எப்பிரச்சனை குறித்தும் உரிய முறையில் மாநில செயற்குழு (அ) மாநில பொதுக்குழு குழுவில்தான் விவாதிக்க வேண்டுமென அனைத்து உறுப்பினர்களையும் இக்கிளை கேட்டுக்கொள்கிறது. வருங்காலங்களில் வாத பிரதிவாங்களை தவிர்க்குமாறு கேட்டுக் கொள்கிறது.

2019 - 2020 ஆம் ஆண்டு வருமானவரி கணக்கீட்டுப்படிவம் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது. பிப்ரவரி மாதம் 10 ஆம் தேதிக்குள் அப்படிவத்தை மாவட்ட கருவூலத்தில் கொடுக்குமாறு உறுப்பினர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டனர். இணைச் செயலர் பேரா. வ. மணிவண்ணன் நன்றி கூற பொதுக்குழு இனிதே நிறைவுற்றது. மாநில தேர்தல்குறித்து எமது கிளை கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறது.

1. 22.12.2019 மற்றும் 19.01.2020 ல் நடைபெற்ற கிளை பொதுக்குழுவின் முடிவின்படி மாநில பொறுப்பாளர்கள் தேர்தலை சங்கத்தின் பழைய அடிப்படைவிதிகளின் படி நடத்திட வேண்டுகிறது. கிளை வற்புறுத்துகிறது.
2. சங்கப்பணிகள் தொய்வின்றி நடைபெற நிதி மிகவும் அவசியம் எனவே உறுப்பினர் கட்டணத்தோடு, பேரா. நரசிங்கம் அறக்கட்டளை நிதி, சங்க வளர்ச்சி நிதி ஆகிய நிதிகளை கிளை, மாவட்டம், மாநிலம் அமைப்புகளுக்கு பொறுப்பாளர்களாக வரவிழைவோர் கண்டிப்பாக செலுத்தவேண்டுமென கிளை கேட்டுக்கொள்கிறது. அனைத்து உறுப்பினர்களையும் செலுத்த வேண்டுமென்பன புதிய சங்க அமைப்பு விதிகளில் சேர்க்கக் கேட்டுக்கொள்கிறது.
3. சங்கப் பொறுப்பாளர்கள் மற்றும், இயக்க நடவடிக்கைகள் குறித்து பொதுவழியில் வலைதளம் மூலமாக விவாதிப்பதை இக்கிளை வருத்தத்துடன் வன்மையாக எதிர்க்கிறது. எப்பிரச்சனை குறித்தும் மாநில செயற்குழு அல்லது மாநில பொதுக்குழுக்களில் தான் பேசித் தீர்வுகாண வேண்டுமென அனைவரையும் கிளையின் பொதுக்குழு வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.





பேரா **கு. மகாலிங்கம்**

செயலர், திருவண்ணாமலை

**விருதுநகர் கிளை**

விருதுநகர் கிளையின் பொதுக்குழு கூட்டம் 11.01.2020 முற்பகல் 11.00 மணியளவில் விருதுநகர் பாண்டியன் நகர் சடுகுடுக்கா வகையறா V. இராமசாமி நாடார் திருமண அரங்கில் முனைவர் N. இன்பமணி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்று தலைமையுரையாற்றினார். இலவச கண் பரிசோதனை முகாம் நடத்த வந்த சிவகாசி கண் மருத்துவர் Dr. B. அனில் குமார் அவர்களை கிளை செயலர் வரவேற்றுப் பேசினார். கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**இரங்கல் தீர்மானம்:** சென்றமாதம் 25 ஆம் தேதி நமது கிளை உறுப்பினர் பேரா. காஞ்சனா தேவி அவர்களது துணைவர் திரு. மனோகரன் அவர்கள் இயற்கை எய்தினார். அன்னாரது ஆத்மா சாந்தி அடைய கூட்டத்திற்கு அனைத்து உறுப்பினர்களும் இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தினர்.

1. இம்மாதம் பிறந்தநாள் காணும் நமது கிளையின் உறுப்பினர்கள் 9 பேரின் பெயர்களை கிளை துணைத்தலைவர் பேரா. S. கருப்பையா அவர்கள் வாசிக்க கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரும் வாழ்த்துக்களை தெரிவித்தனர்.
2. கூட்டத்திற்கு வந்திருந்த அனைத்து உறுப்பினர்களுக்கும் சுவையான மதிய விருந்து வழங்கிய Dr. A. சண்முகசுந்தரம் அவர்களுக்கு இக்கிளை நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.
3. கிருஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு 20.12.2019 அன்று விருதுநகர் சௌடாம்பிகை பள்ளியில் பயிலும் குழந்தைகள் 20 பேருக்கும் ஆங்கிலப் புத்தாண்டு தினத்தை முன்னிட்டு 06.01.2020 அன்று விருதுநகர் V.P.P. பெரியசாமி நாடார் மேல்நிலைப்பள்ளியில் பயிலும் குழந்தைகள் 20 பேருக்கும் ரூ. 8000/- மதிப்புள்ள வண்ணப்புத்தாடைகளை நமது கிளையின் சார்பாக வழங்கிய நமது கிளைத்தலைவர் இன்பமணி அவர்களை இக்கிளை நன்றியுடன் பாராட்டுகிறது.



4. மத்திய பொருப்பாளர்கள் தேர்தலின் நிலைபற்றியும் இனிமேல் நாம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை பற்றியும் கிளை செயலர் விரிவாக எடுத்துக்கூறிய செய்திகளை கிளை பொதுக்குழு ஏற்றுக் கொண்டது.

5. வருகிற 25 ஆம் தேதி திருச்சியில் நடைபெறவிருக்கும் செயற்குழுவில் பேச வேண்டியது பற்றி முடிவெடுக்கப்பட்டது.
6. இன்று நடந்த இலவச கண்பரிசோதனை முகாமிற்கு 25 பேர் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். அவர்களுக்கும் முகாமை சிறப்பாக நடத்திக் கொடுத்த Dr. B. அனில்குமார் MBBS., M.S.DO. அவர்களுக்கும் இக்கிளை நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.
7. ஆயுள் சந்தா ரூ. 1000/– மற்றும் செய்திமடல் சந்தா ரூ 300/– செலுத்தி AIFRUCTO ஆயுள் உறுப்பினராக தங்களை இணைத்துக் கொண்ட கீழ்கண்ட உறுப்பினரை இக்கிளை நன்றிபாராட்டி வரவேற்கிறது. சென்ற மாத தொடர்ச்சி .... 165 பேரா B. சதாசிவன் ..... தொடரும். துணைத்தலைவர் கருப்பையா அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே முடிந்தது. **அடுத்த மாதம் 08.02.2020 இரண்டாம் சனிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு விருதுநகர் பாண்டியன் நகர் கடுகுடுக்கா வகையறா V. இராமசாமி நாடார் திருமண அரங்கில் நடைபெறும்**.

பேரா V. **ஹரிராஜன்**
செயலர், விருதுநகர் கிளை

**ஈரோடு கிளை**

ஜனவரி மாதக் கூட்டமானது ஈரோடு ஒற்றுமை அரங்கில் 11.01.2020 சனிக்கிழமை காலை 11.10 மணி அளவில், தலைவர் Dr. K. பரமசிவம் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. ஒரு நிமிட அமைதிப் பிரார்த்தனையுடன், மறைந்த கோபி கல்லூரிக் கணிதப் பேராசிரியர் K. காளியண்ணனுக்கும் ஒருநிமிட மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது. தொடர்ந்து மறைந்த பேராசிரியருக்கு அவரது பணியையும், புகழையும் பாராட்டி பேரா. A. செங்கோட்டு வேலு, நாகேஸ்வரன், கோகுல், செந்தாமரைக் கண்ணன் மற்றும் Dr. A. புண்ணிய கிருஷ்ணன் ஆகியோர் இரங்கலைப் பதிவு செய்தனர். செயலர் பேரா. கோகுல் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்து மையப் பொறுப்பாளர்களின் தேர்தல் அறிவிப்பு, தேர்தலில் போட்டியிடுபவர்கள், போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், ஆகியவற்றைக் குறிப்பிட்டு சென்னைக் கிளையின் தலைவர் நீதிமன்றத்திற்குச் சென்றதால் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டதைத் தெரிவித்தார். நீதிமன்ற அறிவுரைப்படி, போட்டியிட கட்டிட நிதி, வளர்ச்சி நிதி, நரசிங்கம் அறக்கட்டளை நிதி, AIFRUCTO கட்டணம் ஆகியன செலுத்தியிருந்தால் (அல்லது) பழையபடி உறுப்பினர் கட்டணம் மட்டும் செலுத்தியிருந்தால் போதுமானது அகிய இரண்டில் ஒன்றைக் கூட்டம் கூட்டி 25.01.2020 அன்று திருச்சியில் நடைபெறும் மாநில செயற்குழுவில் தெரிவிக்குமாறு மாநில பொதுச் செயலாளர் சுற்றறிக்கை அனுப்பியிருப்பதைக் குறிப்பிட்டார். இதனை ஒட்டி நடந்த விவாதத்தில் பேரா. J. சுப்பிரமணியன், B. பிரபாகரன், Dr. இளங்கோ, C. லோகநாதன், K. செந்தாமரைக் கண்ணன் மற்றும் பலர் கலந்து கொண்டு பேசியதில் இறுதியாக, கிளைச்சந்தா கட்டிய எந்த ஓர் உறுப்பினரும் போட்டியிடத் தகுதியானவர் என்றும், மாநிலப் பொறுப்பாளர்களை





AUT, MUTA, GCTA அமைப்புக்களில் இருந்து சுழற்சி முறையில் போட்டியின்றி பதவியில் அமர்த்தலாம் என்றும் முடிவு செய்யப்பட்டது.

பின்னர் வரும் நிதியாண்டு முடியும் வரை பழைய பொருளர் பேரா. B. பிரபாகரன் நிதியை நிர்வாகம் செய்வார் என முடிவு செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து மொழிபெயர்ப்புப் புத்தகத்தை வெளியிட்டுள்ள பேரா. அகிலனுக்குப் பாராட்டும், கிளை உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை தயாரிக்கும் பொறுப்பை Dr. K. கடம்பவனத்திற்கும் கொடுக்கப்பட்டது. பொருளர் ராமசாமி பேசுகையில் கோவை மண்டல அலுவலகத்தில் எந்த பணியும் நடப்பதில்லை என்றும் மையப் பொறுப்பாளர்கள் ஒருமுறை அங்கு வந்து பேசி, நிலைமையைச் சீராக்க வேண்டும் என்றும் கூறினார். இதை மாநில செயற்குழுவில் தெரிவிக்க முடிவு செய்யப்பட்டது. ஓய்வு பெற்ற பேராசிரியர் ஒவ்வொருவருக்கும் அவரது S.R புத்தக நகல் கொடுக்கப்பட வேண்டும் என்று பேரா. Dr. T. செந்தில் வலியுறுத்தினார். பின்னர் ஜனவரி மாதத்தில் பிறந்தநாள் காணும் பேராசிரியர்கள் Dr. A.M. பத்மநாபன், C. லோகநாதன், Dr. K. நாகராஜன், M. கோபாலசாமி, A. ரத்தினசாமி, R. பழனியப்பன் ஆகியோருக்கு பிறந்தநாள் வாழ்த்துக் கூறப்பட்டது. செயலர் பேரா. கோகுல் பிராணாயமா பயிற்சியும், பேரா. V. தர்மசேகரன் முத்திரைப் பயிற்சியும் அளித்த பின் இணைச் செயலர் பேரா. கண்ணாயம்மாள் நன்றி கூற, தலைவர் கூட்டத்தை ஒத்தி வைத்தார்.

பேரா. **கோகுல சந்தானகிருஷ்ணன்,**
செயலர், ஈரோடுகிளை.

**காஞ்சிபுரம் கிளை**

எமது கிளையின் மாதாந்திர பொதுக்குழுக் கூட்டம் கடந்த 11.01.2020 சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் தலைவர் பேரா. எம். எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தலைமையில் காஞ்சிபுரம் பச்சையப்பன் ஆடவர் கல்லூரியில் நடந்தது. வந்திருந்த உறுப்பினர்களை தலைவர் வரவேற்று பேசியபின்னர், துணைத்தலைவர் பேரா. முனைவர் எஸ் இரத்தினம் அவர்கள் திருக்குறள் இறுதி அத்தியாயமான ஊடல் உவகை எனும் தலைப்பின் கீழுள்ள பாடல் குறள்களை விவரித்து உரையாற்றினார். பின்னர் கூட்ட நிகழ்வுகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

**விவாத விபரங்களும் ஏற்கப்பட்ட தீர்மானங்களும்:–**

1. டிசம்பர் 2019 – ஜனவரி 2020 மாதங்களில் நிகழ்ந்த இயக்க நடவடிக்கைகளை செயலர் எடுத்துரைத்தார்.
2. மறைந்த மூத்த உறுப்பினர் பேரா. ப்பி. பி. ஆர். சுப்ரமணியசா அவர்களின் துணைவியர்க்கு குடும்ப ஓய்வூதியம் முதலான பணப்பலன்களைப் பெற்றுத்தர ஆவன செய்யப்பட்டுள்ள விவரத்தை செயலர் எடுத்துக் கூறினார்.
3. 2020 – 2022 ஆண்டுகளுக்கான மையப் பொறுப்பாளர் தேர்தல் தள்ளிவைக்கப்பட்ட காரணங்களை விரிவாக விவாதித்து உறுப்பினர்கள் ஏற்றுக் கொண்ட தீர்மானங்கள்.

- ❖ கடந்த 2015 முதல் அமலில் உள்ள தற்போதைய அமைப்பு விதிகளில் கண்டுள்ளவாறு, மாநில பொறுப்பாளர்கள் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள், உறுப்பினர் சந்தா செலுத்தி, குறைந்தது 50% இயக்கப் பணிகளில் பங்கேற்று இருந்தால் அவர் தேர்தலில் போட்டியிட முழுதகுதி பெறுகிறார் என இப்பொதுக்குழு கருதுகிறது.
- ❖ கட்டிட நிதி, அய்ஃபெரக்டோ ஆண்டுச் சந்தா மற்றும் இதர வழக்கமான தியை உறுப்பினர்கள் செலுத்தும் கால அவகாசம் தொடர்வதால், இவற்றை செலுத்தாமல் தேர்தலில் போட்டியிட விரும்பும் வேட்பாளர்களின் போட்டி மனுக்களை நிராகரிக்கச் சாத்தியமில்லை எனவும் இப்பொதுக்குழு கருதுகிறது.

4. உறுப்பினர்கள் தங்களுக்கிடையே பொங்கல் நல்வாழ்த்துக்களை பகிர்ந்து கொண்டனர்.
5. **அடுத்த மாத பொதுக்குழுக் கூட்டம் 12.02.2020 அன்று நடைபெறும்** என்ற அறிவிப்புடன் இணை செயலர் பேரா. ஆர். மணிவாசகம் நன்றி நவில கூட்டம் நிறைவுற்றது.

பேரா E.M. **சுப்பிரமணியன்**

செயலர், காஞ்சிபுரம் கிளை

**கோவை - நீலகிரி கிளை**

இக்கிளையின் கூட்டம் 11.01.2020 சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு கோவை அரசு கலைக்கல்லூரியில் தலைவர் மு. சக்கரபாணி தலைமையில் நடைபெற்றது. தலைவர் வந்திருந்த உறுப்பினர்களை வாழ்த்தி வரவேற்று, புத்தாண்டு மற்றும் பொங்கல் திருநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

தலைமை கழகம் குறிப்பிட்டவாறு, 28.12.2019 அன்று தேர்தல் நடைபெறாமல் போனதற்கான காரணங்களை விளக்கினார். தேர்தலில் போட்டியிட வாய்ப்பிழந்த சிலர் நீதிமன்றம் சென்றதும் இதன் காரணமாக நீதிபதி விதித்த இரண்டு நிபந்தனைகளையும் கூறி, ஒன்று கடந்த ஆண்டுகளில் நடத்தியவாறே தேர்தலை நடத்துவது. மற்றொன்று கட்டிடநிதி செலுத்தியவர்கள் மட்டும் போட்டியிட முடியும் எனில், செயற்குழு, பொதுக்குழு ஒப்புதலுடன், பதிவுத்துறை பதிவாளரின் ஒப்புதல் பெற்று கழக சட்ட விதிமுறைகளில் திருத்தம் செய்தபின் தேர்தலை நடத்திக் கொள்ளலாம் எனவும் தெரிவித்தவற்றை விளக்கமாக எடுத்துக் கூறியதுடன், இதுபற்றி உறுப்பினர்கள் கருத்துக்களைத் தெரிவிக்குமாறு வேண்டினார். உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்ததுடன் கழக தேர்தலை விரைவில் நடத்தி முடிப்பது நல்லது எனவும், நீதிமன்ற நிபந்தனையின்படி கழக விதிகளில் திருத்தம் செய்து தேர்தல் நடத்த இரண்ட மூன்று மாதங்கள் ஆகலாம் எனவும் கூறி பழைய முறையிலேயே தேர்தலை நடத்தலாம் என்ற கருத்தையும் தெரிவித்தனர். பின்னர் மாநிலத்துணைத் தலைவர் பேரா. எம். ராஜகோபால், தேர்தல் நடக்காமல் போனதற்கான காரணங்களையும், நீதிமன்றம் சென்றதற்கான சூழலையும் உறுப்பினர்களுக்கு விளக்கினார். அத்துடன் கழகம் சாதிக்க வேண்டியவை நிறைய





உள்ளதால், விரைவில் புதிய பொறுப்பாளர்களைத் தேர்ந்தெடுப்பது நல்லது எனவும் கூறினார். அடுத்து, இணைச்செயலர் பேரா. கோபாலகிருஷ்ணன் இந்த மாதம் பிறந்தநாள் காண்போர் பெயர் பட்டியலைப்படித்து, வாழ்த்து கூறினார். உறுப்பினர்களும் வாழ்த்தினார். இவர்களின் வந்திருந்த உறுப்பினர்களுக்கு இனிப்பு, காரம், தேநீர் வழங்கி பிறந்தநாள் மகிழ்வினை கீழ்க்கண்டவர்கள் வெளிப்படுத்தினர். Dr. P. ராஜசேகரன், பேரா. R. ஜெகநாதன், பேரா. V. கிருஷ்ணன், பேரா. P. குமாரவேல், Dr. S. கனகவேல் ராஜன் பேரா. K. நாச்சிமுத்து, திருமதி. பத்மாவதி, பேரா. திருமதி. சுகந்தா சம்பத் குமார் ஆவர்.

புதிய உறுப்பினர் Dr. R சத்தியமூர்த்தி (கொங்குநாடு இயற்பியல் துறை H.O.D)அவர்கள் புதிய உறுப்பினராகப் பதிவு செய்து கொண்டார். அவருக்கு வாழ்த்து தெரிவிக்கப்பட்டது. அடுத்து, செயலர் பேரா. சு. பாலசுப்ரமணியன், கோவை கிளை, பழைய முறையிலேயே தேர்தலை நடத்தி பொறுப்பாளர்களை தேர்ந்தெடுப்பது நல்லது என்பதை தீர்மானமாக அறிவித்தார். உறுப்பினர்கள் கரவொலி மூலம் ஒப்புதல் அளித்தனர். அவர் நன்றி கூற கூட்டம் நிறைவு பெற்றது. **அடுத்த கூட்டம் வரும் 08.02.2020 சனிக்கிழமை மாலை 4.30 க்கு கோவை அரசு கலைக்கல்லூரியில் நடைபெறும்**. உறுப்பினர்கள் அதிக அளவில் கலந்துகொள்ள வேண்டுகிறோம்.

பேரா **மு. சக்கரபாணி**

தலைவர், கோவை – நீலகிரி கிளை

**பொள்ளாச்சி கிளை**

எமது கிளையின் பொதுக்குழு கூட்டம், கிளைத்தலைவர் முனைவர் அவர்கள் தலைமையில் 11.01.2020 அன்று பிற்பகல் N.G.M கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. கிளைச் செயலர் முனைவர் மு. இராமச்சந்திரன் உறுப்பினர்களை வரவேற்று தேர்தல் தொடர்பான செய்திகளை விளக்கினார். பொதுக்குழு உறுப்பினர்கள் அதிர்ச்சியையும் கவலையையும் தெரிவித்தனர். உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துகளின் அடிப்படையில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**தீர்மானம் – 1 :** உறுப்பினர் கட்டணம் நிலுவையின்றி செலுத்தி 50 சதவீதம் கூட்டம் மற்றும் இயக்க நடவடிக்கைகளில் பங்கேற்றிருந்தால், மாநில பொறுப்பாளர்களுக்கான தேர்தல் தகுதியாக கருதலாம் என தீர்மானிக்கப்படுகிறது.

**தீர்மானம் – 2 :** மாநில பொறுப்பாளர்களாக போட்டியிடுபவர்கள் கட்டிட நிதி, வளர்ச்சி நிதி, நரசிங்க அறக்கட்டளை மற்றும் பிற நிதிகளை நிலுவையின்றி செலுத்தியிருக்க வேண்டுமென தீர்மானிப்பதை இப்பொதுக்குழு வன்மையாக கண்டிக்கிறது.

**தீர்மானம் – 3 :** மாநில செயற்குழு கூட்டங்களுக்கு கிளைச்செயலாளர் மட்டுமே கலந்து கொள்ள வேண்டுமென்பதை கிளைப் பொதுக்குழு கண்டிக்கிறது. கிளைப் பொறுப்பாளர்களில் யாரேனும் ஒருவர் கலந்து கொள்ளலாம் என்று ஒரு மனதாகத் தீர்மானிக்கப்படுகிறது.

இம்மாதம் பிறந்தநாள் காணும் பேராசிரியர்கள்,

K. S. பாலசுப்பிரமணியம், மற்றும் பேரா. R. கனகராஜ், பேரா. திருமலைச்சாமி அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்தனர்.

இறுதியாக பேரா. பாலகங்காதரன் அவர்கள் உறுப்பினர்களுக்கு தேனீர் விருந்தளித்த பேரா. K. S. பாலசுப்பிரமணியம் அவர்களுக்கும், உறுப்பினர்களுக்கும் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவடைந்தது. **அடுத்த கூட்டம் 08.02.2020 அன்று மாலை 4 மணிக்கு N.G.M கல்லூரி வளாகத்தில் நடைபெறும்.**

பேரா M. **ராமச்சந்திரன்**
செயலர், பொள்ளாச்சி கிளை

**பொறையார் கிளை**

தமிழ்நாடு ஓய்வு பெற்ற கல்லூரி ஆசிரியர் கழகம் பொறையார் கிளையின் ஜனவரி மாத கூட்டம் 11.01.2020 அன்று தரங்கம்பாடி வட்ட ஓய்வு பெற்ற அலுவலர் சங்க கட்டிடத்தில் பேரா. அ. அருள்மரியநாதன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

**நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:-**

1. நமது கிளையின் உறுப்பினர் Dr. பிராங்க் ரெத்தினகுமார் அவர்களின் தந்தை திரு. விக்டர் தர்மராஜ் அவர்கள் கடந்த 06.01.2020 அன்று பாளையங்கோட்டையில் இயற்கை எய்தினார்கள். அன்னாருக்கு நமது கிளையின் உறுப்பினர்கள் இரண்டு நிமிட மவுன அஞ்சலி செலுத்தினார்கள்.
2. 2020 ஆம் ஆண்டு ஜனவரி திங்களில் பிறந்தநாள் கண்ட குடும்ப ஓய்வூதியர் திருமதி. ரூபி அந்தோணிமுத்துக்கு பிறந்தநாள் வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது.
3. உறுப்பினர்கள் அவர்களது, 2020-2021ம் ஆண்டுக்கான சந்தா தொகையை 2020 மார்ச் மாதத்திற்குள் செலுத்திட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.
4. உறுப்பினர் கட்டணம் முழுமையாக செலுத்தியும், 50% கூட்டங்களில் பங்கேற்றும் இருக்கின்ற எந்த உறுப்பினரும் மாநில பொறுப்பாளர்கள் தேர்தலில் பங்கேற்க அனுமதித்தல் வேண்டும் என்பதனை இக்கிளை வலியுறுத்தி கூறுகிறது. கட்டிட நிதி, அறக்கட்டளை நிதி மற்றும் வளர்ச்சி நிதி ஆகிய மூன்று நிதிகளையும் உறுப்பினர்கள் தாமாக முன்வந்து தன்னிச்சையாக செலுத்த வேண்டுமே தவிர அந்த நிதிகள், தேர்தலில் போட்டியிட ஒருதகுதியாக வைக்கப்பட கூடாது என்று இக்கிளை தீர்மானிக்கிறது. மற்றும் ஓய்வுபெற்ற பேராசிரியர்கள் சங்கத்திற்காக சென்னையில் தனியாக அலவலகம் தேவையில்லை என்று இக்கிளை கூறுகிறது.
5. முனைவர் N. கண்ணப்பா, பொருளர், அவர்கள் நன்றி கூற கூட்டம் நிறைவுற்றது. **அடுத்த கூட்டம் 08.02.2020 அன்று சனிக்கிழமை மாலை சரியாக 5 மணிக்கு நடைபெறும் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.** உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ள வேண்டப்படுகிறார்கள்.

பேரா. **சு. சுகுமார்**
செயலர், பொறையார் கிளை





**கன்னியாகுமரிக் கிளை**

14.01.2020 அன்று மாலை 4.30 மணிக்குக் கிளைத்தலைவர் Dr. R. இலட்சுமண சர்மா அவர்கள் தலைமையில் நாகர்கோவில் Y.M.C.A கூட்ட அரங்கில் வைத்துக் கிளைக் கூட்டம் நடந்தது. வந்திருந்தோரை Dr. M. பத்மநாபபிள்ளை அவர்கள் வரவேற்றார். இறைவணக்கத்துடன் கூட்டம் தொடங்கியது. கிளைச் செயலாளர் முன் கூட்ட அறிக்கை படித்தார். மாநிலப் பொறுப்பாளர்களைத் தேர்வு செய்யும் தேர்தல் எப்படி நடக்க வேண்டும் என்பதைக் கிளைகள் தோறும் கூட்டம் நடத்தி அந்தந்தக் கிளையில் தலைமைக் கழகத் தேர்தல் எவ்வாறு நடத்த வேண்டும் என்று எடுக்கப்படும் தீர்மானத்தைக் கிளைச் செயலாளர்கள் அறிக்கையாகத் தலைமைக் கழகத்திற்குத் தரவேண்டும் என்று மாநிலச் செயலாளர் கேட்டுக் கொண்டதற்கிணங்க, கிளைத் தலைவர் நிலைமைகளைக் கிளைக் கூட்டத்தில் தெளிவாக விளக்கியுரைத்தபின், அனைவரும் பலநிலைகளையும் சிந்தித்து கீழ்வரும் தீர்மானத்தை நிறைவேற்றினார்கள்.

**தீர்மானம்:** TANRECTA அமைப்பின் மாநிலப் பொருப்பாளர்கள் தேர்தலில் போட்டியிடுவதற்கு உறுப்பினர் கட்டணம் கட்டியிருப்பதும், 50 % கூட்டங்களில் கலந்து கொண்டமையும் தகுதிகளாகக் கொள்ளப்பட வேண்டும் என்றும் பிற நிதிகள் செலுத்துவதை நிபந்தனைகளாகக் கொள்ள வேண்டாம் என்றும் கன்னியாகுமரிக் கிளை தீர்மானிக்கிறது. கிளையின் வேறுசில பிரச்சனைகள் பற்றித் தலைவர் தெளிவாக விளக்கம் கொடுத்தார். இங்ஙனம் நடந்த கூட்ட இறுதியில் கிளைப் பொருளாளர் நன்றியுரையுடன் கூட்டம் இனிதே நிறைவடைந்தது. **கிளையின் அடுத்த கூட்டம் 11.02.2020 அன்று மாலை வழக்கமான இடத்தில் வழக்கமான நேரத்தில் நடைபெறும்.**

பேரா Dr. S. **குமரசுவாமி**
செயலர், கன்னியாகுமரி கிளை, செல்: 94435 81130.

**கரூர் கிளை**

ஜனவரி மாதத்திய கிளைக் கூட்டம் 12.01.2020 அன்று வழக்கம்போல் கரூர் வாணிபச் செட்டியார் மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டம் பத்து மணியளவில் துவங்கியது. கூட்டத்திற்கு கிளை துணைத்தலைவர் பேரா. J. சீனிவாசன் அவர்கள் தலைமையேற்றார். கிளை உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர். கூட்டத்தில், நடைபெறவிருந்த தலைமைக் கழக தேர்தல் பற்றி பல்வேறு கருத்துக்கள் பரிமாறப்பட்டன. இதுகாறும் தலைமைக் கழக தேர்தல் பற்றிய தபால்கள் பல்வேறு நபர்களிடமிருந்து பெறப்பட்டதை உறுப்பினர்கள் பார்வைக்கு கொண்டு வரப்பட்டது. அதில் உறுப்பினர்கள் மத்தியில் ஒருசில கருத்து முரண்பாடுகள் வெளியானது. இதில் கிளையின் ஒருமித்த முடிவுகள் பற்றி பொதுச்செயலர் அவர்களால் கேட்கப்பட்டிருந்தது. இதுகாறும் நம் கழகத்தில் எந்த வித இசகு பிசகு இல்லாமல் சகோதரத்துவ பாணியில் கழகத்தைக் கட்டிக் காத்து வந்த சங்கத்திற்கு இப்படி ஒரு கருத்து முரண்பாடா என உறுப்பினர்கள் மத்தியில் மிகுந்த வருத்தத்தை உருவாக்கியது. எந்த ஒரு பிரச்சனையாக இருந்தாலும்,

சம்பந்தப்பட்ட நபர்களை அழைத்துப் பேசி, ஒரு நல்ல சுமூக முடிவை எடுப்பதைவிட்டு விட்டு நீதிமன்ற வாயில் அளவுக்கு சென்றுவிட்டதை எண்ணி, உறுப்பினர்கள் பலரும் வேதனைப்பட்டனர். நம் கழக உறுப்பினர்கள் வயது முதிர்ந்தவர்கள். இவர் அனைவரின் மத்தியில் இப்படியொரு கசப்பான நிலையை உருவாக்கியுள்ளதைப் பற்றி கழகத்திற்கே ஒரு சறுக்கு நிலையை ஏற்படுத்தியுள்ளது போல் தெரிகிறது.

நிலைமை எதுவாக இருந்தாலும் கடந்தவையெல்லாம் மறந்து இதுகாறும் செயல்பட்டு வந்த நிலையை உருவாக்கிட வேண்டும் என்று கிளையின் ஏகோபித்த உறுப்பினர்களின் எண்ண பிரதிபலிப்பை கீழ்க்காணும் நிலையில் கரூர் கிளை தெரிவிக்கலாகிறது. அதாவது, "தற்போதுள்ள அமைப்பு விதியின் படி தேர்தல் நடத்த வேண்டும் என்று தலைமையை கரூர் கிளை கேட்டுக் கொள்கிறது."இதன்படி மாநிலத் தேர்தலை கூடிய விரைவில் நடத்தி முடிக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறது. மேலும் இம்மாத இறுதிக்குள் வருமான வரி செலுத்துவதற்கு சேமிப்பு விபரங்களை விரைவில் அதாவது கருவூலத்தில் சேர்ப்பிக்க வேண்டுமென உறுப்பினர்களை கேட்டுக் கொண்டது. இதுகாறும் கிளைச்சந்தா, கட்டணப்பாக்கியை செலுத்தாதவர்கள் உடன் பொருளாளரிடம் செலுத்துமாறு கேட்டுக்கொண்டது. இறுதியில் கிளை இணைச் செயலர் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவுற்றது. **அடுத்த கூட்டம் பிப்ரவரி 09.02.2020 நாளில் நடைபெறுமென உறுப்பினர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.**

பேரா. **வி. பழனிச்சாமி**
செயலர், கரூர் கிளை

**தருமபுரி கிளை**

தமிழ்நாடு ஓய்வுபெற்ற கல்லூரி ஆசிரியர் கழக தருமபுரி கிளையின் மாதாந்திரக் கூட்டம் 11.01.2020 சனிக்கிழமை மாலை 4.45 மணிக்கு தருமபுரி ஸ்ரீ ராமா லாட்ஜில் இக்கிளையின் துணைத்தலைவர் பேரா. K. குப்புசாமி அவர்களின் தலைமையில் நடைபெற்றது. கிளை செயலர் பேரா. G. சின்னப்பையன் அவர்கள் கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்றார். மேலும் செயலர் பொதுச் செயலரிடமிருந்து தேர்தல் தொடர்பாக வந்திருந்த அறிக்கையினை படித்து அனைவரின் கருத்துக்களை கூறுமாறு கேட்டுக்கொண்டார். கழக வளர்ச்சி நிதி, அறக்கட்டளை நிதி பற்றியாரும் குறைகூறவில்லை. ஆனால் கட்டிட நிதி தேவையற்றது என்று அனைவரும் தங்களது கருத்துக்களை கூறினர். ஆகவே சுற்றறிக்கை 11/2019 ல் கண்டுள்ள எண் 2 – ஐக் கொண்டு தேர்தல் நடத்த அனைவரும் கேட்டுக்கொண்டனர். இறுதியாக சிற்றுண்டிக்குப் பிறகு கிளை உறுப்பினர் பேரா. V. பாலசுப்பிரமணியன் அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிது நிறைவடைந்தது. **அடுத்த மாதாந்திரக் கூட்டம் 08.02.2020 சனிக்கிழமை மாலை 4.45 மணிக்கு தருமபுரி ஸ்ரீ ராமா லாட்ஜில் நடைபெறும்**.

பேரா. **சின்னப்பையன்**
செயலர், தருமபுரி கிளை





**சிதம்பரம் கிளை**

ஜனவரி மாதச் செய்தி மடலில் குறிப்பிட்டபடி கிளையின் கூட்டம் 11.01.2020 சனிக்கிழமை நடந்தது. அதிக எண்ணிக்கையில் உறுப்பினர்கள் வந்திருந்ததைப் பாராட்டி முகமன் கூறிச் செயலர் வரவேற்றார்.

அனைவருக்கும் பொங்கல் திருநாள் வாழ்த்துக்களை உரித்தாக்கி இம்மாதம் பிறந்தநாள் கண்ட நண்பர்கள் பேராசிரியர்கள் முனைவர் கே. கலியபெருமாள், சி. முருகேசன், ஜி. தர்மலிங்கம், டி. பக்கிரி சாமி, வி. சுந்தரமூர்த்தி, டி. முத்துக்குமரன் ஆகியோர் நலமுடனும், அமைதியுடனும் நல்வாழ்வு வாழ வாழ்த்தப்பட்டனர்.

**இரங்கல் செய்தி:-** உடல் நலம் குன்றி சென்னையில் சிகிச்சை பெற்று வந்த துணைத்தலைவர் பேராசிரியர் டி. இராமசாமி குணமடைய இறைவனை இறைஞ்சப்பட்டது. இச் செய்திகள் அனுப்பும் கால கெடுவுக்குள் 15.01.2020 அன்று அவர் மறைந்தார் எனும் செய்தி வந்தது. அடுத்த நாள் 16.01.2020 அன்று நான் உட்பட பேரா. எஸ். சிவகுமார் (பொருளாளர்), இணைச் செயலர், அப்துல் ரஹீம் விருத்தாசலத்திலிருந்து இருவர், பேராசிரியர்கள் ஆர். முத்துக்குமரன், டி. வெங்கடேசன், பேரா. P. சிவப்பிரகாசம், ஜி தர்மலிங்கம், பேரா. எம். தமிழ்மணி ஆகியோர் அவரது இல்லம் சென்று அஞ்சலி செலுத்தி வந்தோம். கிளையின் சார்பாக மலர் அஞ்சலியும் செய்யப்பட்டது. அவரது இல்லத்தரசி, மகன்கள் மகள் மற்றும் உறவினர்களுக்கு ஆறுதல் கூறி வந்தோம்.

விழுப்புரம் தமிழ்ப்பேராசிரியர் பழமலை அவர்களின் மகன், ப.ச. லெனின் (ஓமியோபதி சிறப்பு மருத்துவர்) அவர்கள் இறந்த செய்தி (01.01.2020) அதிர்ச்சி அளித்தது. தனக்கு உற்ற நண்பராகவும் அரிய உரிய மருத்துவ ஆலோசனைகள் வழங்கியவர் எனவும் ஓமியோபதி மருத்துவம் பற்றி பல நூல்கள் எழுதியவர், AYUSH எனும் அமைப்பில் ஓர் உறுப்பினர். நமது TANRECTA உறுப்பினர் (விழுப்புரம் கிளை) பேரா. தனஞ்செயன் அவர்களின் நெருங்கிய உறவினர் ஆவார். அவரது ஆன்மா சாந்தி அடைவதாக.

TANRECTA வின் மாநிலப் பொருப்பாளர்கள் தேர்தல் 28.12.2020 அன்று நடக்க இருந்தது. கழகவிதிகளுக்கும் புறம்பாக நடத்தப்பட இருந்த தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன. "தற்போது நடைமுறையில் உள்ள விதிகளின் படி தேர்தலை நடத்துக அல்லது புதிய விதிகளை செயற்குழுவில் விவாதித்து சங்கங்களின் பதிவாளரின் ஒப்புதல் (துந்தால்) பெற்று தேர்தல் நடத்து" என தீர்ப்பு தந்துள்ளது; கிளைகளின் கருத்தை தீர்மானங்களாக்கி அனுப்பும்படி பொதுச்செயலரின் கடிதத்தின்படி கிளையின் ஒருமித்த ஒப்புதலுடன் தீர்மானங்கள் தனியே அனுப்பப்பட்டுள்ளது. பிறந்தநாள் விருந்தளித்த நண்பர்கள் கே. கலியபெருமாள், சி. முருகேசன், ஜி. தர்மலிங்கம், ஆர். முத்துக்குமரன் ( கடந்த மாதப் பிறந்தநாள் கண்ட இவர் அக்கூட்டத்தில் பங்கேற்க இயலாமற் போனதால் இம்மாதம் பெருந்தன்மையுடன் விருந்து செலவை பங்கேற்றார்) ஆகியோருக்கு நன்றி பாராட்டப்பட்டது. தேர்தல் சம்மந்தமான வழக்கு பிப்ரவரி மாதம் மீண்டும் விசாரணைக்கு வருகின்ற சூழலில் அடுத்த கூட்டம் எப்போது நடத்தலாம் என இரண்டும்

கெட்டான் நிலை. இப்போதைக்கு பிப்ரவரி 8 ஆம் நாள் எனக் கொள்ளுவோம். மாற்றம் இருப்பின் குறுஞ்செய்தி, **WHATSAPP** செய்தி மூலம் தெரிவிக்கப்படும்.

**தீர்மானம் – 1:** தற்போது நடைமுறையில் உள்ள விதிமுறைகள் படி தான் தேர்தல் நடத்தப்பட வேண்டும் அதாவது மாநில பொறுப்பாளர் பதவிக்கு போட்டியிடும் வேட்பாளர், உறுப்பினர் கட்டணம் நிலுவை இன்றி செலுத்தி இருக்க வேண்டும் மற்றும் கிளை கூட்டங்களில் அதன் செயல்பாடுகளில் 50 சதவீதம் அளவிற்கு கலந்து கொண்டிருக்க வேண்டும் என்னும் இரண்டு மட்டும்தான். இதற்கு மாறாக பஞ்ச நிதிகள் (கட்ட நிதி போன்றவை) செலுத்தி இருக்க வேண்டுமென்பது விதிக்கு புறம்பானவை. (By Passing the by laws)

**தீர்மானம் – 2 :** 25.01.2020நடத்த உள்ள மாநில செயற்குழு கூட்டத்தில் கிளைச் செயலர் மட்டும்தான் பங்கேற்க வேண்டும் இது நடைமுறை சாத்தியமற்றது. செயலர்கள் பங்கேற்க இயலாத சூழல்கள் பல இருக்கும் ஆகவே, கிளையின் சார்பில் ஒருவர் பங்கேற்கலாம் என்பதை வலியுறுத்தி தீர்மானிக்கிறது.

**தீர்மானம் – 3 :** தற்போதைய தேர்தல் குழு ஒருதலைபட்சமாகவும் தன்னிச்சையாகவும் செயல்பட்டதால், புதிய தேர்தல் குழு அமைக்கப்பட்டு அது தான் தேர்தலை நடத்த வேண்டும்.

**தீர்மானம் – 4 :** அமைப்பு விதிகளில் மாற்றம் தேவைப்பட்டால் மாநில பொதுக்குழுவைக் கூட்டிதான் மேற்கொள்ளப்பட வேண்டும் செயற்குழுவில் அல்ல.

**தீர்மானம் – 5 :** TANRECTA ஒரு Association அகவே இருக்க வேண்டும். DISASSOCIATE ஆகிவிடக் கூடிய செயல்கள் தவிர்க்கப்பட வேண்டியது.

பேரா. **க. இளங்கோவன்**
செயலர், சிதம்பரம் கிளை

### கிருஷ்ணகிரி கிளை

எம் கிளையின் புத்தாண்டின் முதல் கூட்டம் 11.01.2020 அன்று மாலை 5 மணியளவில் கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள ஆரியபவன் ஹோட்டலில் நடைபெற்றது. கிளைச் செயலாளர் தலைமை தாங்கினார். செயலர் அனைவரையும் வரவேற்றார். இந்த மாதம் தன் பிறந்தநாளைக் கொண்டாடும் பேரா. S. சுந்தரம் அவர்களுக்கும் மற்றும் தங்கள் திருமணநாளைக் கொண்டாடும் பேரா. பயாஸ் பாச்சா மற்றும் பேரா. K. வேலுசாமி அவர்களுக்கும் வாழ்த்துக்கள் கூறப்பட்டன. சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையின் நீதி அரசர் TANRECTA- வின் மாநிலப் பொறுப்பாளர்களின் தேர்தலை நடத்த வழங்கியுள்ள இரண்டு ஆலோசனைகளைப் பற்றி செயலாளர் உறுப்பினர்களுக்கு விளக்கிக் கூறினார்.

**ஆலோசனை – 1:** “கட்டிட நிதி, வளர்ச்சி நிதி, நரசிங்கம் அறக்கட்டளை நிதி மற்றும் கட்டணம் ஆகியவற்றை செலுத்தியிருந்தால் மட்டும் போட்டியிடத் தகுதி பெற்றவர்” – என்று அமைப்பு விதிகளில் மாற்றம் செய்தபின், தேர்தலை நடத்துவது.

**ஆலோசனை – 2 :** பழைய உறுப்பினர் AIFRUCTO கட்டணம் செலுத்தி, 50% கூட்டம், இயக்க நடவடிக்கைகளில் பங்கேற்றிருக்க வேண்டும் என்ற அமைப்பு விதிப்படி தேர்தல் நடத்துவது. நாம் இவற்றில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து தீர்மானம்





நிறைவேற்ற வேண்டும் என்று செயலர் கேட்டுக் கொண்டார். ஒவ்வொருவரும் தான் தேர்ந்தெடுத்த ஒன்றை அறிவிக்க கேட்டுக் கொள்ளப்பட்டது. ஒவ்வொருவரும் (அனைவரும்) இரண்டாவது ஆலோசனையை தெரிவித்துப் பதிவு செய்தனர். அதன்படி கீழ்க்கண்ட தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் – 1 :** மாநிலப் பொறுப்பாளர் தேர்தலில் கிளைப் பொறுப்பாளர்கள் **(மாநிலப் பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவரும்)** ஒவ்வொருவரும் வாக்களிக்குமாறு “அஞ்சல் ஓட்டு” **(Postal Vote)** போட வழிவகை செய்ய வேண்டும் என்று தீர்மானிக்கப்படுகிறது.

**தீர்மானம் – 2 :** பேரா. கோவிந்தராஜ் – இதுவரை ( **9/5, Third Cross ,** ஜக்கன் நகர், கிருஷ்ணகிரி – 635 001, **Cell No. 9486338624)** கிளைக்கு உறுப்பினர் கட்டணம் செலுத்தவில்லை. எனவே அவர் இக்கிளையின் “அடிப்படை உறுப்பினர் அல்ல” என்று தீர்மானிக்கப்படுகிறது. சிற்றுண்டி தேநீருக்குப் பின் செயலர் அனைவருக்கும் நன்றி கூறினார். இத்துடன் கூட்டம் நிறைவுற்றது.

பேரா. **மா. அற்புதமணி**
செயலர், கிருஷ்ணகிரி கிளை

### திருநெல்வேலி கிளை

கிளையின் ஜனவரி 2020 மாதாந்திரக் கூட்டம் 09.01.2020 அன்று மாலை 6 மணிக்கு பேரா. **M.** கதிர்வேல் ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது. வருகை புரிந்த உறுப்பினர்களை பேரா. S. தோத்தாத்ரி வரவேற்றார். இதுவரை இந்த ஆண்டிற்கு (2019–2020) உறுப்பினர் கட்டணம் செலுத்தாதவர்கள் கூடிய விரைவில் சந்தாத் தொகை ரூ. 400/– ஐ செலுத்துமாறு நினைவூட்டப்படுகிறார்கள்.

நீதியரசர்கள் வழங்கிய இரண்டு ஆலோசனைகளில் இரண்டாவதாகவுள்ள “பழைய உறுப்பினர் கட்டணம் செலுத்தி 50% கூட்டம் மற்றும் இயக்க நடவடிக்கைகளில் பங்கேற்றிருக்க வேண்டும்” என்பதைக் கொண்டே மாநில பொறுப்பார்கள் தேர்தலை நடத்திட வேண்டும் என்று இன்றைய கிளையின் பொதுக்குழு கூட்டத்தில் கலந்து கொண்ட 19 உறுப்பினர்களும் ஏகமனதாகக் கூறினர்” என்பதனை தெரிவித்துக் கொள்கிறேன்.மேலும் இதுகாறும் வரை தனியார் கல்லூரிகளில் பணியாற்றி ரூ. 14,940 பெற முடியாதவர்களுக்காக இனிவரும் மாநில பொறுப்பாளர்கள் காலம் கடத்தாமல் நீதிமன்றம் சென்று அதனைப் பெற்றுத்தர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் இக்கிளை கேட்டுக் கொள்கிறது.

இம்மாதம் (பிப்ரவரி 2020) பிறந்த நாள் கொண்டாடும் பேராசிரியர்கள் **Dr. S.** காந்திமதி, **K.** சம்பத், **T. A.** சேதுராமலிங்கம், அப்துல் சலாம், **S.** திருமலை வேலாயுதம், ஆகியோர் நோயற்ற வாழ்வுடனும், புகழுடனும், மன அமைதியுடனும் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி இச்சங்கம் அவர்களை வாழ்த்துகின்றது. புதியதாக இணைந்துள்ள பேராசிரியர் **Dr. S.** இராமச்சந்திரன் உறுப்பினர்களுக்குத் தன்னை அறிமுகம் செய்து கொண்டார். தனது 85 வயது பிறந்தநாளை மிகச்சிறப்பாக கொண்டாடிய நமது கிளையின் தலைவர பேரா. **M.** கதிர்வேல் ஆறுமுகம் அவர்கள் உறுப்பினர்கள் அனைவருக்கும் இரண்டு இனிப்பு, காரம் வழங்கி சிறப்பானதொரு மாலைத் தேநீரை வழங்கி உறுப்பினர்களை

மகிழ்வித்தார்கள். பேரா. M. நாராயணன் நன்றி கூற கூட்டம் இனிது நிறைவுற்றது. **பிப்ரவரி 2020, மாதக் கூட்டம் 13.02.2020 (இரண்டாம் வியாழன்) அன்று மாலை 6 மணிக்கு வழக்கம் போல் ஜங்ஷன், இந்துக் கல்லூரி மேனிலைப் பள்ளியில் நடைபெறும்**. உறுப்பினர்கள் தவறாது கலந்து கொள்ளும் படி அன்புடன் கேட்டுக் கொள்கிறார்கள்.

பேரா. **தி. பார்வதிநாதன்**
செயலர், திருநெல்வேலி கிளை

## கும்பகோணம் கிளை

கும்பகோணம் கிளையின் கூட்டம் கோபால ராவ் நூலக வளாகத்தில் 11.01.2020 அன்று மாலை 5.30 மணியளவில் நடைபெற்றது. கிளைத் துணை தலைவர் முனைவர் ச. மணி அவர்கள் திருக்குறள் சொல்லக் கூட்டம் துவங்கியது. கிளைத்தலைவர் பேரா. இராஜ சேகரன் அவர்கள் தலைமை ஏற்று வரவேற்புரை நிகழ்த்தினார். செயலாளர் பேரா. மாரிமுத்து அவர்கள் கடந்தமாத நிகழ்வுகளை விளக்கினார். மாநிலத் தேர்தல் பற்றிக் கிளையில் விவாதிக்கப்பட்டது. உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்தனர். உறுப்பினர்கள் தேர்தல் நடைபெறாததைப் பற்றி வருத்தத்தை வெளிப்படுத்தினர். இந்தமாதம் பிறந்தநாள் காணும் உறுப்பினர்களுக்கு வாழ்த்துத் தெரிவிக்கப்பட்டது. அனைவருக்கும் பொங்கல் வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது. கிளையின் உறுப்பினர் பேரா. பாலகிருஷ்ணன் அவர்களின் தாயார் இயற்கை எய்தியதற்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. கிளையில் கீழ்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. அமைப்பு விதிகளின் அடிப்படையிலேயே மாநிலத் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.
2. மாநிலத் தேர்தலில் போட்டியிடச் சந்தா மட்டுமே செலுத்தி இருந்தால் போதும் என்ற விதியைக் கடைபிடிக்க வேண்டும்.
3. மாநிலச் செயற்குழுக் கூட்டத்தில் செயலாளர் மட்டுமே பங்கேற்க வேண்டும் என்பதை வலியுறுத்தக் கூடாது. செயலாளர் பங்கேற்க இயலாதபோது கிளையின் பொறுப்பாளர்களில் யாரேனும் ஒருவர் பங்கேற்க மாநில ஆட்சிக்குழு அனுமதிக்க வேண்டும்.
4. தேர்தல் நடைபெறக் காலதாமதமாகும் என்றால் பொதுக்குழுவால் தற்காலிகக் பொறுப்புக் குழு ஒன்று நியமிக்கப்பட்டு மாநிலத் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.
5. அவசர காலங்களில் கிளைகளில் முடிவு எடுப்பதற்குக் கிளையில் செயற்குழு அமைத்துக் கொள்ள மாநிலத் தலைமை அனுமதி தர வேண்டும்.

பேரா. **ப. மாரிமுத்து**
செயலர், கும்பகோணம் கிளை

## நாமக்கல் கிளை

கிளையின் பொதுக்குழு கூட்டம் கிளைத்தலைவர் முனைவர் R. வெங்கடாசலம் தலைமையில் 12.01.2020 அன்று முற்பகல், ஓய்வுபெற்ற அலுவலர் சங்கக் கட்டிடத்தில் நடைபெற்றது. முதலாவதாக, புத்தாண்டு வாழ்த்துக்களுடன் புதிதாக பொறுப்பேற்றுக் கொண்டுள்ள பொறுப்பாளர்களை முன்னாள் கிளைத்தலைவர் பேரா. R. நடேசன் அவர்களும் முன்னாள் கிளை





செயலாளர் பேரா. V. சுப்பிரமணியம் அவர்களும் வாழ்த்திப் பேசினார்கள். அதைத் தொடர்ந்து தலைவர் அவர்கள் கிளை ஆட்சிக்குழுவின் சார்பாக புத்தாண்டு மற்றும் பொங்கல் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டு பொதுக்குழுவின் கருது பொருள் தொடர்பாக விளக்கி பேசினார்கள். அடுத்ததாக செயலாளர் அவர்கள் தேர்தல் தொடர்பாக வந்திருந்த சுற்றறிக்கையை பொதுக்குழுவில் வாசித்துக் காட்டினார். அதன்பிறகு பொதுக்குழு விவாதித்து கீழ்க்கண்ட தீர்மானங்களை ஒரு மனதாக நிறைவேற்றியது.

தீர்மானங்கள்:-

1. நாமக்கல் கிளையின் தலைவர் மற்றும் செயலராக பல ஆண்டுகள் இயக்க நலனுக்காக பணியாற்றி, வயது முதிர்வின் காரணமாக தற்போது பொறுப்புக்களில் இருந்து விடுபட்டுள்ள முன்னாள் கிளைத் தலைவர் R. நடேசன் மற்றும் கிளைச் செயலாளர் பேரா. V. சுப்பிரமணியம் ஆகியோருக்கு கிளை மனமார்ந்த நன்றியை தெரிவித்து, தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேலும் அவர்களுடன் இணைந்து செயல்பட்ட அனைத்து பொறுப்பாளர்களுக்கும் நன்றியை தெரிவிக்கிறது.
2. தேர்தல் தொடர்பாக எழுந்துள்ள பிரச்சனையை தீர்க்கும் வகையில் தற்போதுள்ள இயக்க அமைப்பு விதிகளின் படி, புதிய தேர்தல் குழுவை அமைத்து, தேர்தல் அறிவிப்பை வெளியிட்டு, உடனடியாக தேர்தலை நடத்தி முடிக்க வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.
3. 2008-09 கல்வியாண்டில் ஓய்வுபெற்று, மீளப் பணியமர்த்தப்பட்ட (Re - deployment) பேராசிரியர்களுக்கு திருத்தப்பட்ட ஊதிய விகிதத்தின் அடிப்படையில் மீளப் பணியமர்த்தப் பட்ட காலத்திற்கான நிலுவையை உடனடியாக பெற்றுத்தர முயற்சி மேற்கொள்ள வேண்டும். என தீர்மானிக்கப்பட்டது.

இறுதியில் செயலாளர் முனைவர் T.R. கணேசன் அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவுற்றது. கூட்டத்திற்கு பின்பு புதிய பொறுப்பாளர்கள் அனைத்து உறுப்பினர்களுக்கும் மதிய விருந்து அளித்தனர். அனைவரும் அதை நன்றியுடன் ஏற்றுக்கொண்டனர். **அடுத்த கூட்டம் நடைபெறும் தேதி, மற்றும் பிற விபரங்களை உறுப்பினர்களுக்கு கடிதம் அல்லது தொலைபேசி மூலமாக தெரிவிக்கப்படும்.**

பேரா. **T.R. கணேசன்**
செயலர், நாமக்கல் கிளை

## வேலூர் கிளை

வேலூர் கிளையின் ஜனவரி மாதக் கிளைக் கூட்டம் கிளைத் தலைவர் முனைவர் ஆர். கணேசன் தலைமையில் 07.01.2020, மாலை 5.00 மணிக்கு வேலூர், ஆசிரியர் இல்லத்தில் நடந்தது. கிளைச் செயலர் முனைவர் மு. குருசாமி அனைவரையும் வரவேற்றார். புத்தாண்டு, மற்றும் பொங்கல் நல்வாழ்த்துக்களுடன் 2020 ஆம் ஆண்டின் முதல் கூட்டம் அதிக உறுப்பினர்களோடு தொடங்கியது. ஜனவரி மாதம் பிறந்த நாள் கொண்டாடும் உறுப்பினர்கள் நால்வர் ஆவர். பேரா. டி. பால்ராஜ், பேரா. ஜி. ஜக்ரியா பாவு, பேரா. ஆர். நடராசன், மற்றும் முனைவர் ஆர். சுசீலா ஆகியோர் நல்ல உடல் வளத்துடன்,

நோய் நொடியின்றிப் பல்லாண்டு வாழ வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

மாநிலப் பொறுப்பாளர்களுக்கான தேர்தல் தள்ளிவைக்கப்பட்டுள்ளது. அது தொடர்பாக, மாநிலச் செயற்குழுக் கூட்டம் 25.01.2020 – இல் திருச்சியில் நடைபெறவுள்ளது. அத்தேர்தல் நடத்துவதற்காக இரண்டு ஆலோசனைகளில் ஒன்றைத் தேர்வு செய்யக் கிளைச் செயலர்கள் கேட்டுக் கொள்ளப் – பட்டிருக்கிறார்கள். அதன்படி வேலூர் கிளையிலும் கருத்து கேட்கப்பட்டது.

“பழைய உறுப்பினர் கட்டணம் செலுத்தி 50% கூட்டம், இயக்க நடவடிக்கைகளில் பங்கேற்றிருக்க வேண்டும்” என்ற இரண்டாவது ஆலோசனையை வேலூர் கிளை ஏகமனதாகத் தெரிவு செய்துள்ளது. பேரா. என். வெங்கடேசன் மற்றும் முனைவர் P.Y. நாராயண சாமி ஆகிய இரண்டு உறுப்பினர்களும் தெரிவு செய்த இந்த இரண்டாவது ஆலோசனையை அனைத்து உறுப்பினர்களும் ஏகமனதாக ஏற்று, அதனையே செய்தாகச் செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானமாக அறிவித்திட முடிவானது. கிளைச் செயலர் அக்கூட்டத்தில் தவறாது கலந்திடவும் கேட்டுக் கொண்டார்கள். கூட்டத்தில் கலந்துகொண்ட அனைத்து உறுப்பினர்களுக்கும் கிளையின் துணைத் தலைவர் ஆர். ராஜேஸ்வரியும், பேரா. கே. ரேவதியும் இணைந்து மாலைச் சிற்றுண்டி வழங்கிச் சிறப்பித்தார்கள். வழக்கம்போல் பேரா. ஆர். ஆனந்தன் தேன் நெல்லிக்கனியும் கேக்கும் வாழைப்பழமும் அளித்தார்கள். எல்லோருக்கும் நன்றி. கிளைப் பொருளர் நன்றிக்குப் பின், கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

**பிப்ரவரி மாதக் கிளைக் கூட்டம் மாதத்தின் இரண்டாவது செவ்வாய்க் கிழமையான 11.02.2020 அன்று மாலை 5.00 மணிக்கு வேலூர், ஆசிரியர் இல்லத்தில் நடைபெறும்.**

முனைவர் **மு. குருசாமி**

செயலர், வேலூர் கிளை

### இராமநாதபுரம் கிளை

இராமநாதபுரம் கிளையின் மாதாந்திர பொதுக்குழுக் கூட்டம் 11.01.2020 சனிக்கிழமை அன்று மாலை 6.30 மணி அளவில் இராமநாதபுரம் விவேகானந்ததா சமுதாயக் கல்லூரி வளாகத்தில் கிளைத்தலைவர் பேரா. முனைவர் R. காசிநாத துரை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. வருகை புரிந்த உறுப்பினர்களுக்கு வரவேற்பும், கூட்டத்திற்கான கருது பொருள் பற்றிய விளக்கமும் தலைமை உரையில் இடம்பெற்றது. 28.12.2019 அன்று நடைபெறுவதாக இருந்த மாநில நிர்வாகிகள் தேர்தல் நடைபெறாமல் போனது குறித்த சம்பவங்களை கிளைப்பொருளாளர் பேரா. க. ஜீவானந்தம் உறுப்பினர்களுக்கு விளக்கமாக எடுத்துரைத்தார்கள். இப்பிரச்சனை குறித்து அனைத்து உறுப்பினர்களும் தங்கள் கருத்துக்களை தெரிவித்தபின்பு பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. “உறுப்பினர் கட்டணம் செலுத்தி 50 % கூட்டம், இயக்க நடவடிக்கைகளில் பங்கேற்றிருக்க வேண்டும்” என்பதைக் கொண்டு தேர்தல் நடத்துவது.” 25.01.2020 அன்று திருச்சியில் நடைபெற உள்ள மாநில செயற்குழு கூட்டத்தில் கிளைச் செயலாளர் கலந்துகொண்டு





இத்தீர்மானத்தை வலியுறுத்துவது என முடிவு செய்யப்பட்டது. கிளையில் புதிதாக இணைந்துள்ள உறுப்பினர் பேரா. முனைவர் S. சையது உசேன் அவர்கள் கூட்டத்தில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டார்கள். 2019–20 நிதி ஆண்டுக்கான வருமானவரி கணக்கிடும் படிவங்களை கிளை பொருளாளர் உறுப்பினர்களுக்கும் வழங்கி பூர்த்தி செய்வது தொடர்பான விளக்கமும் அளித்தார்கள். வருகைபுரிந்த உறுபபினர்களுக்கு இரவு உணவினை பேரா. முனைவர் ஆ. குருசாமி அவர்கள் வழங்கி நண்பர்களின் நன்றியை பெற்றுக் கொண்டார்கள். **கிளையின் அடுத்த பொதுக்குழு கூட்டத்தை வருகின்ற 15.02.2020 சனிக்கிழமை மாலை 6.30 மணி அளவில் இராமநாதபுரம் விவேவகானந்தா சமுதாயக் கல்லூரி வளாகத்தில்** நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது. கிளையின் துணைத்தலைவர் பேரா. முனைவர் S. பாலசுப்பிரமணியன் நன்றி உரைக்குப் பின் கூட்டம் நிறைவடைந்தது.

பேரா. S. **சுரேஷ் தாஸ்**

செயலர், இராமநாதபுரம் கிளை

### உடுமலைப்பேட்டை கிளை

18.01.2020 , சனிக்கிழமையன்று காலை 11.00 மணிக்கு கிளைப் பொதுக்குழுக் கூட்டம் நடைபெற்றது. கிளைத்தலைவர் பேரா. M.R. வேலுசாமி கூட்டத்திற்கு தலைமையேற்று அனைவரையும் வரவேற்று சிறப்புரையாற்றினார். பின்பு பொதுச்செயலர் சுற்றறிக்கை 11/2019 தெரிவித்துள்ளதை உறுப்பினர்களுக்கு விவரித்தார். கிளைச் செயலர் பேரா. M. வெள்ளிங்கிரி, வருகிற 25.01.2020 அன்று நடைபறும் மாநில செயற்குழுக் கூட்டத்திற்கான தேர்தல் தீர்மானங்களைப் பற்றி எடுத்துரைத்தார். நீண்ட விவாதத்திற்கு பின்பு கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

1. அமைப்பு விதிகளின் அடிப்படையிலேயே மாநிலத் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.
2. மாநிலத் தேர்தலில் போட்டியிட உறுப்பினர் சந்தா செலுத்தி, கிளை நடத்திய கூட்டங்கள், பிற நடவடிக்கைகளில் குறைந்தது 50% பங்கேற்றிருக்க வேண்டும்.
3. கிளைச் செயலர் மாநில செயற்குழுக் கூட்டத்திற்கு வரவியலாத சூழலில் கிளையின் சார்பாக, கிளையினுடைய பொறுப்பாளர் ஒருவர் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட வேண்டும்.

**பிறந்தநாள் வாழ்த்து:** ஜனவரி மாதம் பிறந்தநாள் கண்ட பேரா. M. வெள்ளிங்கிரி, பேரா. முனைவர் G. வீரமணி, பேரா. G. ராகினிதேவி ஆகியோருக்கு பிறந்தநாள் வாழ்த்துரைத்துப் பாராட்டினார். கிளைப் பொருளாளர் வெளி மாநிலத்திற்கு சென்றுள்ளதால், வந்த பின்பு AIFRUCTO விற்கு ஆயுள் சந்தாவாக 36 பேருக்கு அனுப்பி வைக்கப்படும் என தெரிவித்தார். கூட்டத்திற்கு வருகை புரிந்த அனைத்து உறுப்பினர்களுக்கும் நன்றி தெரிவித்தார். **அடுத்த கூட்டம் 07.01.2020 அன்று சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு GAC வளாகத்தில் நடைபெறும்.**

பேரா M. **வெள்ளிங்கிரி**

செயலர், உடுமலைப்பேட்டை கிளை

**விழுப்புரம் கிளை**

விழுப்புரம் கிளையின் பொதுக்குழுக் கூட்டம் 11. 01. 2020 சனிக்கிழமை மாலை 05. 00 மணிக்கு விழுப்புரம், வி. ஆர். பி. மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் கிளைத் தலைவர் பேரா. மு. வரதராசலு அவர்களது தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தின் முதல் நிகழ்வாக பேரா. த. பழமலை அவர்களின் மகன் மருத்துவர் ப. உ. லெனின் அவர்கள் இயற்கை எய்தியமைக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது. வருகைபுரிந்த உறுப்பினர்களை கிளைப்பொருளாளர் பேரா. எஸ். வி. சுப்புராம் அவர்கள் வரவேற்று உரையாற்றினார். திங்கள் ஒரு குறள் என்ற வகையில் பேரா. முனைவர் மா. சற்குணம் அவர்கள் வினை செயல் வகை என்னும் அதிகாரத்தில் பின்வரும் குறளின் விளக்கத்தினை அளித்தார்:

**“வினையால் வினையாக்கிக் கோடல் நனைகவுள்**
**யானையால் யானையாத் தற்று” (குறள் 678)**

கிளைத்தலைவர் தமது தலைமையுரையில் வருமானவரிக் கணக்கீட்டுப் படிவம் பற்றியும் பேரா. த. பழமலை அவர்களது குடும்பத்தினருக்கு இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்தார். கிளைச்செயலர் பேரா. முனைவர் மு. சேகர் அவர்கள் தமது அறிக்கையில் கடந்த ஒரு மாதமாக நிகழ்ந்த இயக்க செயல்பாடுகளைப் பற்றி விவரித்தார். மாநிலத் தேர்தல் நீதிமன்ற நடவடிக்கையால் நடைபெறாமல் போனது பற்றியும் அது தொடர்பான செய்திகளையும் உறுப்பினர்களுக்குத் தெரிவித்தார். கிளையில் அகவை எண்பது நிரம்பிய உறுப்பினர்கள் பேரா. இர. இராமநாதன் மற்றும் பேரா. த மதிவாணன், ஆகியோருக்கு கிளையின் ஆட்சிக்குழுவின் சார்பில் பொன்னாடை அணிவித்து, மாநில மாநாட்டில் வழங்கப்பட்ட சான்றிதழையும் அளித்து மரியாதை செய்த செய்தியைத் தெரிவித்தார். மாநிலத் தேர்தல் தொடர்பாக வரும் 25. 01. 2020 அன்று திருச்சியில் நடைபெறவுள்ள மாநில செயற்குழுவில் கிளை சார்பான கருத்து பற்றி விவாதிக்கப்பட்டு பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

**தீர்மானம் எண் 1:** மாநிலத் தேர்தல் தற்போதுள்ள அமைப்பு விதிகளின்படியே, புதிய தேர்தல் குழுவால், காலம் தாழ்த்தாமல் உடனடியாக நடத்தப்படவேண்டும் என ஏகமனதாக தீர்மானிக்கப்படுகிறது.

**தீர்மானம் எண் 2:** மாநிலப் பொறுப்புக்கு வருபவர்கள் தொடர்ந்து இரண்டு முறைக்கு மேல் ஒரே பதவியில் தொடரக் கூடாது என்றும், புதியவர்களுக்கு வாய்ப்பளித்து அமைப்பின் ஒற்றுமையையும், கண்ணியத்தையும் காத்திடவேண்டும் எனவும் இப்பொதுக்குகுழு ஏகமனதாக தீர்மானிக்கிறது.

**தீர்மானம் எண் 3:** 2003-க்குப் பிறகு பணி நியமனம் செய்யப்பட்ட பேராசிரியர்களுக்கு பழைய ஓய்வூதியம் இல்லை என்பதால் வரும் ஒரு சில ஆண்டுகளில் உறுப்பினர்களின் எண்ணிக்கை தொடர்ந்து குறையும் என்பதாலும், சில ஆண்டுகளுக்குப் பிறகு கட்டிடம் பயனற்றுப் போய் ஒருசிலரின் கைகளுக்குப் போகக்கூடிய வாய்ப்பு அதிகம் என்பதாலும் கட்டிட நிதி செலுத்த இயலாது என இப்பொதுக்குழு ஏகமனதாக தீர்மானிக்கிறது.

**தீர்மானம் எண் 4:** மாநில செயற்குழுக் கூட்டத்தில் கிளைச் செயலர்





கலந்துகொள்ள இயலாத சூழலில் கிளை சார்பாக அங்கீகாரம் பெற்ற ஒருவர் கலந்துகொள்ள அனுமதிக்கப்படவேண்டும் என தீர்மானிக்கப்படுகிறது.

மாதம் ஒரு மூலிகை என்ற வகையில் பேரா. பீ. தனஞ்செயன் அவர்கள் “கீழா நெல்லி” என்னும் மூலிகையின் மருத்துவப் பயன்களை விவரித்தார். இம்மாதம் பிறந்த நாள் காணும் பேரா. அ. கிருபானந்தம் மற்றும் பேரா. முனைவர் இர. முகமது ரியாஸ் இக்பால் ஆகியோருக்கும், மண நாள் காணும் பேரா. இர. நிசார், பேரா. ஏ.மோகன்ராஜ், பேரா. ப. கோவிந்தன், பேரா. முனைவர் எஸ். திருநாவுக்கரசு மற்றும் பேரா. பு. குமரன் ஆகியோருக்கும் உறுப்பினர்கள் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்தனர். இறுதியாக மாநிலப் பொதுக்குழு உறுப்பினர் பேரா. இர. நிசார் அவர்களது நன்றியுரைக்குப் பின் கூட்டம் நிறைவடைந்தது. கூட்டத்திற்குப்பின். திருமதி ஆர். பானுமதி (குடும்ப ஓய்வூதியர்) அவர்கள் சிறப்பு விருந்து அளித்தார். **அடுத்த மாதக்கூட்டம் 08. 02. 2020 சனிக்கிழமை மாலை 05.00 மணிக்கு வி. ஆர். பி. மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெறும்** என்றும், தொடர்ந்து பிப்ரவரி மாதம் பிறந்த நாள் மற்றும் மண நாள் காணும் உறுப்பினர்களால் அளிக்கப்படும் விருந்து உபசரிப்பு நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டது.

பேரா. முனைவர். **மு. சேகர்,**
செயலர், விழுப்புரம் கிளை.

**குடியாத்தம் கிளை**

குடியாத்தம் கிளையின் பொதுக்குழு கூட்டம் 05.01.2020 அன்று அரசினர் திருமகள் ஆலைக்கல்லூரியில் கணிதத்துறை அறையில் காலை 11.00 மணிக்கு பேரா முனைவர் எஸ். பாபு கிளைத்தலைவர் தலைமையில் நடைபெற்றது. கிளைச்செயலர் பேரா. முனைவர் கு. நடராசன் கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்று, பொதுச்செயலரின் சுற்றறிக்கை எண் 11/2019 மீது விரிவான விளக்கத்தினை தொடர்ந்து ஆழமான விவாதங்கள் நடைபெற்றன. குறிப்பாக தேர்தல் குறித்து நீதியரசர் அவர்களின் ஆலோசனைகள் இரண்டையும் விவாதங்கள் நடத்தி பின்வரும் தீர்மானங்கள் மாநில செயற்குழுவிற்கு முன்மொழியப்பட்டன.

**தீர்மானம் : 1 :** பழைய உறுப்பினர் கட்டணம் செலுத்தி 50% கூட்டம், இயக்க நடவடிக்கைகளில் பங்கேற்றிருக்க வேண்டும் என்பதை கொண்டு தேர்தலை விரைந்து நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாநில செயற்குழுவை இக்கிளை கேட்டுக்கொள்கிறது.

**தீர்மானம் : 2 :** ஏற்கனவே பணியாற்றி கொண்டிருக்கும் தேர்தல் குழுவே தொடர்ந்து தனது பணியை செய்து தேர்தலை நடத்த வேண்டும் என மாநில செயற்குழுவிற்கு எங்கள் கிளை முன்மொழிகிறது.

**தீர்மானம் : 3 :** தமிழ்நாடு ஓய்வு பெற்ற கல்லூரி ஆசிரியர் கழகம் சென்னையில் ஒரு கட்டிடம் கட்டுவது அல்லது கட்டிய கட்டிடத்தை வாங்குவது என தீர்மானித்து அனைத்து உறுப்பினர்களிடமும் நிதி திரட்டி வருகிறது. இப்பொருள் குறித்து புதியதாக தொடங்கப்பட்ட எங்கள் கிளை நீண்ட விவாதம் நடத்தி இந்த தீர்மானத்தை முன்மொழிகிறது.

பேரா. முனைவர் **சு. சக்கரவர்த்தி,**
பொருளர். குடியாத்தம் கிளை,

**மதுரை கிளை**

மதுரைக் கிளையின் பொதுக்குழுக் கூட்டம் 07.01.2020 அன்று காலை 10.30 மணிக்கு மூட்டா அலுவலகம் பேரா V. சண்முக சுந்தரம் அரங்கில் நடைபெற்றது. கூட்டத்திற்கு கிளையின் தலைவர் முனைவர் A. மனோகரன் தலைமை வகித்து பொதக்குழு கூட்டத்திற்கு வருகை புரிந்த அனைவரையுமே வரவேற்று, தனது தலைமையுரையை நிகழ்த்தினார்.

**விருதுக்கான பாராட்டு விழா :** கடந்த 28.12.2019 அன்று கோவையில் விஷ்ணுபுரம் வாசகர் வட்டத்தின் சார்பில் முனைவர் அபி அவர்களுக்கு விருது வழங்கப்பட்டது. அபி அவர்களின் கவிப புலமையை பாராட்டி அவர் எழுதிய கவிதைகளுக்கு விஷ்ணுபுரம் விருது வழங்கப்பட்டது. அபி அவர்களை நமது கிளைச் செயலர் முனைவர் N. பெரியதம்பி மற்றும் பேரா A. ஜோசப் ஆண்டனி ஆகியோர் அபியின் தமிழ் புலமையை விரிவாக எடுத்துரைத்தார்கள். நிறைவாக அபி ஏற்புரை கூற பாராட்டு விழா நிறைவுபெற்றது.

இப்பொதுக்குழுவில் பேரா. Dr. G. முத்துசாமி, பேரா. Dr. P. ராஜேந்திரன், Dr. லெட்சுமணன், Dr. சாம்பசிவம், பேரா. நடராஜன் ஆகியோர்கள் புதிய உறுப்பினர்களாக நமது கிளையில் இணைந்துள்ளதாக கூறி கிளைச் செயலர் Dr. பெரியதம்பி அறிமுகம் செய்து, புதியவர்களை சுய அறிமுகம் செய்யவும் கூறினார். அனைவரும் சுய அறிமுகம் செய்து கொண்டனர். ஜனவரி 2020 மாதம், பிறந்த நாள் காணும் பேராசிரியர்களுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்கள். இன்றைய பொதுக்குழுவில் கலந்து கொண்ட பேராசிரியர்களுக்கு, பிறந்தநாள் காணும் பேராசிரியர்கள் மதி உணவு வழங்கினார்கள். தன் பணிகளுக்கிடையில் MUTA R. கிருஷ்ணமூர்த்தி கலந்து கொண்ட அவர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது. பிறந்த நாள் பேராசிரியர்களின் பட்டியலை பேரா. K. V. ஆனந்தன் தொகுத்து வழங்கினார்.

**செயலர் அறிக்கை:** நமது மாநிலத் தேர்தல் 2020-2022 நீதிமன்றத்தால் 28.01.2019 அன்று நடைபெறவிருந்த தேர்தல் தற்போது தள்ளிவைக்கப்பட்டுள்ளது. அதன் விவரங்கள் அடங்கிய சுற்றறிக்கையை பொதுச் செயலர் அனுப்பியுள்ளார். அதில் இரண்டு Option நீதிமன்றத்தால் பரிந்துரைக்கப்பட்டு அதில் ஒன்றை தெரிவு செய்து அதன் தொடர்பாக தீர்மானம் நிறைவேற்றி வருகின்ற 25.01.2020 திருச்சியில் செயற்குழுவில் சமர்பிக்க வேண்டுமென பொதுச் செயலர் பதிவிட்டுள்ளார் என செயலர் Dr. N. பெரியதம்பி அவர்கள் தெரிவித்தார். மேலும் அது தொடர்பான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் :** முன்னதாக உறுப்பினர்களுக்கு இரண்டு Option தெரிவிக்கப்பட்டு விவாதம் மேற்கொள்ளப்பட்டு, விவாதத்தின் நிறைவாக ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தீர்மானங்களை கிளையின் துணைத் தலைவர் Dr. G. ஜெகன்நாதன் வாசித்தார்.





1) உறுப்பினர் கட்டணம், கட்டிட நிதி, வளர்ச்சி நிதி, நரசிங்கம் அறக்கட்டளை நிதி மற்றும் AIFRUCTO சந்தா ஆகியவற்றை செலுத்தியிருந்தால் மட்டும் போட்டியிடத் தகுதி பெற்றவர் என்பதை மாநிலப் பொதுக்குழுவைக் கூட்டி அமைப்பு விதிகளில் இந்த நிபந்தனைகளை சேர்க்க திருத்தம் நிறைவேற்றி கூட்டுறவு சங்க பதிவாளரிடம் ஒப்புதல் பெற்று தேர்தல் நடத்துவது என்ற முதல் **Option** ஆகும்.
மேற்கண்ட நிதி நிபந்தனைகளை உள்ளடக்கிய விதித் திருத்தம் மாநிலப் பொதுக்குழுவை கூட்டி திருத்தம் மேற்கொள்வது என்பது நீண்ட நெடுங்காலமெடுக்கும். மேலும் கூட்டுறவு சங்க பதிவாளரிடம் ஒப்புதல் பெறுதல் அனைத்தும் இன்னும் தேர்தல் நடத்துவதை தாமதப்படுத்தும் என்பதுடன் மேலும் ஒட்டுமொத்த அமைப்பு விதிகளையும் மாற்ற வேண்டியுள்ளதால் தற்போது இந்த Option கைவிடப்பட வேண்டும் என்றும், தற்போதுள்ள ஆட்சிக் குழுவின் பதவிக்காலம் ஏற்கெனவே முடிந்த நிலையில் மேலும் இவ்விதித்திருத்தம் மேற்கொள்ள பொருத்தமாக அமையாது. எனவே புதிய பொறுப்பாளர்கள் தெரிவு செய்யப்பட்டு ஒட்டுமொத்த விதித்திருத்தம் செய்வதே சாலச் சிறந்தது எனவும் இப்பொதுக்குழு ஏகமனதாக தீர்மானித்து தலைமையை வேண்டிக் கொள்கிறது.
2) பழைய உறுப்பினர்கள் கட்டணம் செலுத்தி, 50%, கூட்டம் இயக்க நடவடிக்கைகளில் பங்கேற்றிருக்க வேண்டும் என்பதைக் கொண்டு தேர்தல் நடத்துவது என்ற இரண்டாவது Option - ன் தான் சாலச் சிறந்தது. மேலும் உடன் புதிய தேர்தல் அறிவிப்பை செய்து உடன் புதிய பொறுப்பாளர்களை தெரிவு செய்யும் நோக்கமாக கருதி இக்கிளைப் பொதுக்குழு இரண்டாவது Option னை – ஐ தெரிவு செய்வதுடன் அதனை வரவேற்கிறது. மேற்கண்ட தேர்தல் நடவடிக்கைகள் அனைத்தும் மாநிலச் செயற்குழுவின் ஒப்புதலுடன் உடனடியாக தேர்தலுக்கான அனைத்து நடவடிக்கைகளை மேற்கொள்ள ஏகமனதாக தீர்மானித்து கிளைப் பொதுக்குழு, தலைமையை வலியுறுத்துகிறது.
3) இயக்க விதி என்பது மாநிலத்திற்கும், கிளைகளுக்கும் பொதுவானவை. அப்படி இருக்கும் நிலையில் மாநிலத்தில் செயற்குழு என்று இருக்கும்போது கிளைகளுக்கு செயற்குழு என்று ஒன்று இல்லை, என மீண்டும், மீண்டும் பதிவிடுவதைப் பார்த்தால் இயக்க விதியை . முழுமையாக பின்பற்றுவதுபோல் இருந்தாலும், மாநிலத் தேர்தலில் இயக்க,
விதியை பின்பற்றாது முற்றிலுமாகப் புறந்தள்ளி பார்ப்பது தொடர்பாக கிளை தனது ஆழ்ந்த கவலையை தெரிவிப்பதுடன், இனிவரும் காலங்களில் கிளைச் செயற்குழு இதற்கு முன் எவ்வாறு செயல்பட்டதோ அதே போல் இன்றும் தொடர அனுமதிக்க வேண்டுமென ஒருமனதாக பொதுக்குழு இத்தீர்மானத்தை நிறைவேற்றி தலைமையை வேண்டுகிறது.
4) காலம், காலமாக மாநிலச் செயற்குழுவிற்கு கிளைச் செயலர் வராத நிலையில் அவரின் சார்பில் கிளைப் பொறுப்பாளர்கள் யாராவது ஒருவர் பங்கேற்பது வழக்கம். ஆனால் இன்று கிளைச் செயலர் தவிர்த்து வேறுயாரும் பங்கேற்க

இயலாது என்பது விந்தையாக உள்ளது. எனவே கிளைச் செயலர் தவிர்க்க இயலாத காரணத்தால் செயற்குழுவிற்கு வரவில்லை எனில் அவருக்கு மாற்றாக வேறு கிளைப் பொறுப்பாளர்கள் பங்கேற்க அனுமதிக்க வேண்டுமென இக்கிளைப் பொதுக்குழு ஒரு மனதாக தீர்மானித்து தலைமையை வேண்டுகிறது.

5) டெல்லி ஜவஹர்லால் பல்கலைக்கழகத்தின் வளாகம் மற்றும் விடுதியில் 05.01.2020 அன்று மாலை முகமூடி அணிந்த ஆயுதமேந்திய குண்டர்கள், ஆசிரியர், மாணவர்கள், சங்க பிரதிநிதிகளை இனமறிந்து தாக்கியுள்ளதை இப்பொதுக்குழு வன்மையாக கண்டிப்பதுடன், உடன் மத்திய அரசு உரிய நடவடிக்கையை மேற்கொண்டு வளாகத்தில் அமைதியை உருவாக்கி அனைத்து மாணவர், ஆசிரியர்களுக்கு பாதுகாப்பளிக்க வேண்டும். மேலும் இத்தாக்குதலுக்கு உரியவர்கள் மீது உடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். பாதிக்கப்பட்ட ஆசிரியர், மாணவர்களுக்கு உரிய இழப்பீடு வழங்கவும் வேண்டுமென இப்பொதுக்குழு மத்தியரசை வேண்டிக் கொள்கிறது. இதுபோன்ற நிகழ்வு ஷாமியா மில்லியா பல்கலைக் கழகத்திலும் நடந்துள்ளது. இதையும் பொதுக்குழு வன்மையாக கண்டிப்பதுடன் தாக்குதலுக்கு காரணமானவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென பொதுக்குழு மத்திய அரசை மீண்டும் வேண்டிக் கொள்கிறது.

6) நிதிநிலையை கருத்தில் கொண்டு, AIFRUCTO மாநாட்டை தற்போது நடத்த எந்த விதமான முடிவு மேற்கொள்ளாத நிலையில், பிறமாநிலங்கள் மாநாட்டை நடத்தவில்லை எனில், தமிழகத்தில், AIFRUCTO மாநாட்டை மதுரை நடத்துவதற்கு, மாநிலச் செயற்குழுவும், மாநிலத் தலைமையும் அனுமதிக்க பொதுக்குழு தலைமை வேண்டுகிறது. இது தொடர்பாக கிளைப் பொதுக்குழு தேவைபடின், மாநாட்டை நடத்துவதற்கு தீர்மானம் நிறைவேற்றும் எனவும் தெரிவித்துக்கொள்கிறது.

7) 8.01.2020, அகில இந்தியா தொழில் சங்கங்களின் ஒரு நாள் வேலை நிறுத்தத்திற்கு நமது கிளையின் ஆதரவை தெரிவிப்பதுடன், அப்போராட்ட தர்ணாவிலும் பங்கேற்பது எனவும் முடிவு செய்யப்பட்டது. நிறைவாக கிளையின் பொருளாளர் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவுற்றது. கிளையின் அடுத்த கூட்டம் 11.02.2020 அன்று நடைபெறும் எனவும் முடிவு மேற்கொள்ளப்பட்டது. வங்கி நிதிப் பரிவர்த்தனை விவரங்கள்:

S.B.A/c. 004901000034557, Indian Overseas Bank, Madurai Main. IFSC Code: IOBA0000049, Name of the A/c. Tamilnadu Retired College Teachers Association 1ஆம் ஆண்டு சந்தா : ரூ.500, 2) அறக்கட்டளை நிதி : ரூ.500, 3) வளர்ச்சி நிதி: ரூ.500, 4) AIFRUCTO ஆயுள் சந்தா ரூ.1000, 5) TANRECTA Speaks: 200 Total Rs.2700/- பணம் கட்டியதற்கு ஆதாரமாக SMS கிளைப் பொருளாளருக்கு முனைவர் R. வள்ளி அவர்களுக்கு அனுப்பிவைக்கவும்.

பேரா N. **பெரியதம்பி**

செயலர், மதுரைக் கிளை





**பழனிக்கிளை**

பழனிக் கிளையின் ஜனவரி மாதக்கூட்டம் 18.01.2020ஆம் நாளன்று பகல் 10 மணி முதல் 2 மணிவரை குடும்ப விழாவாக நடைபெற்றது. உறுப்பினர்கள் தங்கள் குடும்பத்தினருடன் பங்கேற்றனர். கிளைத்தலைவர் பேராசிரியர் S. இரத்தினசபாபதி தலைமை ஏற்றார். ஜனவரி மாதம் பிறந்தநாள் காணும் பேராசிரியர்கள் : பேரா. Z.S.பழனிச்சாமி, பேரா. K.G. சிவராமகிருஷ்ணன், பேரா. C. நடனசபாபதி, பேரா. P. கருணாநிதி, பேரா. V. முத்துப்பாண்டி, பேரா. மேஜர் R. முருகேசன், பேரா. P. சந்திரா, பேரா. R. ஜெயமணி, து.தலைவர்பேரா. P. சுப்பிரமணி பிறந்தநாள் வாழ்த்திப் பேசினார்.

80ஆண்டு நிறைவுற்றப் பேராசிரியர்கள் : எண்பதாண்டு நிறைவுற்றப் பேராசிரியர்கள் S.P. மாணிக்கம், K.G. சிவரமகிருஷ்ணன், C. இராஜாமணி ஆகியோரைப் பாராட்டி வாழ்த்துரைத்தார் பேரா. M. தண்டபாணி, பேரா. S.P. மாணிக்கத்திற்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தோம். நிகழ்ச்சிக்கு வர இயலாத மற்ற இரு பேராசிரியர்களுக்கும் வாழ்த்துரைத்து மகிழ்ந்தோம். நளபாகம் உணவகப் பங்குதாரர்கள் மற்றும் பணிபுரியும் ஊழியர்கள் அனைவரையும் பாராட்டிப் பொன்னாடைகள் அணிவித்து கௌரவித்தோம். குடும்ப விழாவில் பேராசிரியர்கள் மேனாள் தலைவர் S.P. மாணிக்கம், செயலாளர் துரை. சுந்தரமூர்த்தி, துணைத்தலைவர் P. சுப்பிரமணியன், பொருளாளர் மேஜர் முருகேசன் ஆகியோர் பேசினர்.

**தீர்மானங்கள் :** 25.01.2020 ஆம் நாளன்று திருச்சியில் நடைபெறும் செயற்குழுவில் தெரிவிப்பதற்கு இரண்டு தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன. ஒன்று, மையமன்றப் பொறுப்பாளர் தேர்தலில் வேட்பு மனுத் தாக்கல் செய்வோர் அமைப்பு விதியில் (Existing Byelaw) உள்ளபடி மூன்றாமாண்டுச் சந்தா செலுத்தியிருக்க வேண்டும். இரண்டு, செயற்குழுக் கூட்டங்களில் பங்கேற்காத சூழலின்போது செயலருக்கு பதிலாக அவர் அனுமதிபெற்றக் கிளை உறுப்பினர் செயற்குழுவில் பங்கேற்றிடலாம்.

**இரங்கல் தீர்மானம் :** பழனி A.P.A கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரியில் முதல்வராகப் பணியாற்றி ஓய்வுபெற்றப் பேராசிரியர் T.R. சீனிவாசன், அதே கல்லூரியில் தாவரவியல் துறையில் பணியாற்றி ஓய்வுபெற்றப் பேராசிரியர் ராஜாங்கம், விலங்கியல் துறையில் பணியாற்றி ஓய்வுபெற்றப் பேராசிரியர் S. அருணாச்சலம் ஆகியோர் இயற்கை எய்தியமைக்கு இரங்கல் தெரிவித்து இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**நன்றியுரை :** பேராசிரியை மரகதம் சிவானந்தம் நன்றியுரைத்திடக் கூட்டம் நிறைவுற்றது. குடும்பவிழா விருந்து நடைபெற்றது. **பிப்ரவரி மாதக் கூட்ட அறிவிப்பு : 11.2.2020 செவ்வாய் மாலை 5.30 மணிக்கு பிப்ரவரி மாதக் கூட்டம் நளபாகம் விழா அரங்கில் நடைபெறும்.** 25.1.2020ஆம் நாளன்று திருச்சியில் நடைபெறவுள்ள மாநில செயற்குழுவிற்காக 18.01.2020 ஆம் நாளன்று பழனிக் கிளையில் நிறைவேற்றப்பட்டத் தீர்மானங்கள்.

1. தற்போது நடைமுறையில் உள்ள TANRECTA அமைப்பு விதிகளைப் (BYE - LAWS) பின்பற்றியே 2020, 2021, 2022 ஆகிய மூன்றாண்டுகளுக்கான மாநிலப் பொறுப்பாளர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்படுகிறது.
2. செயற்குழுக் கூட்டங்களில் செயலாளர் வரவியலாத சூழலின்போது செயலாளரின் பரிந்துரைப்படி அனுப்பப்படும் உறுப்பினரைச் செயற்குழுவில் பங்கேற்றுக் கருத்துரைக்க அனுமதிக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்படுகிறது.

பேரா. **S.R.D. சுந்தரமூர்த்தி,**
செயலர், பழனிகிளை.

### செய்யாறு கிளை

செய்யாறு கிளையின் மாதாந்திரக் கூட்டம் கிளைத்தலைவர் பேரா.சீனிவாச செட்டி அவர்கள் தலைமையில் 11.1.2020 அன்று மாலை 5 மணி அளவில் ஓய்வூதியர் சங்க அரங்கில் நடைபெற்றது. ?ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன் மகனை சன்றோன் எனக்கேட்ட தாய்? என்னும் குறளை விளக்கி தலைவர் பேசினார்.இம் மாதத்தில் பிறந்தநாள் கண்ட/காணும் பேராசிரியர்கள் திரு டி.பக்தவச்சலம்,திரு கே.நவநீதன் மற்றும் திரு டி.ஜி.குமரன் ஆகியோருக்கும் மணநாள் காணும் பேரா.திரு.சீனிவாச செட்டி அவர்களுக்கும் பொதுக்குழு பாராட்டையும் வாழ்த்துகளையும் தெரிவித்தது. செயலரின் அறிக்கைக்குப்பின் மாநில தேர்தல் குறித்து மாநில பொது செயலரிடமிருந்து வந்த சுற்றறிக்கையின் அடிப்படையில் விவாதம் தொடங்கியது.

**தீர்மானங்கள்:**

1. நீண்ட விவாதத்திற்குப்பின் , சங்கத்தின் நலன் கருதி விரைவாக தேர்தல் நடத்துவதை வலியுறுத்துவது என்றும் அது தொடர்பாக செயற்குழுவின் முடிவுக்கு கட்டுபடுவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.
2. 2006க்கு பின் ஒய்வுபெற்றவர்களுக்கான திருத்த ஓய்வூதியத்தை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க தலைமையை கேட்டுக்கொள்வதென தீர்மானிக்கப்பட்டது.

பொருளாளர் முனைவர் ஏ.மெய்யப்பன் அவர்களின் நிதி நிலை அறிக்கைக்குப்பின் அனைவருக்கும் வருமான வரி படிவம் வழங்கப்பட்டது. இப்படிவத்தை தயார் செய்து தன் சொந்த செலவில் கிளை உறுப்பினர்களுக்கு தொடர்ந்து வழங்கிவரும் முனைவர் ஆர்.அஞ்சப்பன் அவர்களுக்கு பாராட்டும் நன்றியும் தெரிவிக்கப்பட்டது. கிளையின் துனைத்தலைவர் பேரா. எம்.கந்தசாமி அவர்கள் நன்றியுரையாற்ற கூட்டம் இனிதே நிறைவுற்றது.

முனைவர் **சா.முத்தழகு,**
செயலர், செய்யாறு கிளை.

### சேலம் கிளை

சேலம் கிளையின் பொதுக்குழுக்கூட்டம் 21.01.2020 நாள் மாலை 4.00 மணயளவில், சேலம்-7, அரசு கலைக்கல்லூரி அறை எண்.5-ல் கிளையின் தலைவர் பேரா.முனைவர் பெ. மாது அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தலைவர் வருகைப் புரிந்த அனைவரையும் வரவேற்று புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்ட நிலையில், கீழ்க்கண்ட இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, மௌன அஞ்சலி செலுத்த ப்பட்டது.





**இரங்கல் தீர்மானம்** : சென்னை கிளை உறுப்பினர் பேராசிரியை திருமதி கே.ஜெயலட்சுமி, கன்னியாக்குமரிக்கிளை உறுப்பினர் பேரா.K.விநாயகமூர்த்தி, தருமபுரி கிளை உறுப்பினர் பேரா.N.கோவிந்தராஜன், விருதுநகர் கிளை உறுப்பினர் பேரா.C.சோமசுந்தரம், கோவை கிளை உறுப்பினர் பேரா. பாலகிருஷ்ணன் பேராசிரியை திருமதி.சுந்தரவல்லி ஆகியோர் மறைவு செய்தியை அறிந்து சேலம் கிளை வேதனையடைவதோடு, அன்னார்களை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்தார்க்கு தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவர்களின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறது. தலைவர் தனது உரையில், கடந்த 08.01.2020 அன்று 12 அம்ச கோரிக்கையை வலியுறுத்தி அகில இந்திய அளவில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் சேலம் மாவட்டத்தில் கிளைப் பொறுப்பாளர்கள் கலந்துக் கொண்டதையும் போராட்ட நடவடிக்கைகளையும் விளக்கி பேசினார். தலைவர் உரைக்குப்பின் கிளைச்செயலர் பேரா.K.R.ரவீந்திரன் அவர்கள் TANRECTA 2020-2022 ஆம் ஆண்டுகளுக்கான மாநிலத் தேர்தலில், மாநிலப் பொதுச்செயலர் தேர்தல் குழு மற்றும் மாநில ஆட்சிக்கு மு உறுப்பினர்கள் முதலானோர் செய்த குளறுபடிகள், விதிமீறல்கள், ஒருதலைபட்சமான நடவடிக்கைகள் முதலானவற்றை சுட்டிக்காட்டி பேசினார். உறுப்பினர்கள் பல்வேறு கேள்விகளும், சந்தேகங்களும் எழுப்பிய நிலையில் தலைவரும் கிளைச்செயலரும் விளக்கமளித்தனர். உறுப்பினர்களின் விவாதங்களுக்குபின் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. TANRECTA மாநிலப் பொதுச்செயலர், TANRECTA Speaks-ல் தெரிவித்த நீதியரசரின் கீழ்க்கண்ட ஆலோசனைகள் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டு விவாதிக்கப்ப ட்டது.

**சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை நீதயரசர் வழங்கியுள்ள ஆலோசனைகள் :**

1. TANRECTA 2020-2022 ஆம் ஆண்டுகளுக்குரிய மாநில பொறுப்பாளர் தேர்தலில் போட்டியிட விரும்பும் வேட்பாளர்கள் a) கட்டிடநிதி, b) கழக வளர்ச்சி நிதி, c) நரசிங்கம் அறக்கட்டளை நிதி, d) AIFRUCTO நிதி, e) உறுப்பினர் கட்டணம் முதலான ஐந்து நிதிகளையும் செலுத்தியிருக்க வேண்டும்.
2. TANRECTA அமைப்பு விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள உறுப்பினர் கட்டணம், கிளை பொதுக்குழுக்கூட்ட நிகழ்வுகளில் 50% வருகைப்பதிவு இருக்க வேண்டும். மேற்குறித்த இரு ஆலோசனைகள் குறித்து 21.1.2020 அன்று நடைபெற்ற சேலம் பொதுக்குழுவில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு:

**தீர்மானங்கள் :**

i) 2020-2022ம் ஆண்டுகளுக்கான TANRECTA மாநில பொறுப்பாளர்களை தேர்ந்தெடுக்கும் தேர்தலை இதுகாறும் நடைமுறையில் உள்ள TANRECTA அமைப்பு விதிகளின்படி நடத்திட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.
ii) 2020-2022ம் ஆண்டுக்கான மாநில தேர்தலுக்கு ஏற்கனவே நியமித்த தேர்தல் குழுவை கலைத்துவிட்டு, புதிய தேர்தல் குழுவை மாநில செயற்குழுவில்

நியமித்து விரைவில் மாநிலத் தேர்தலை நடத்த வேண்டும் எனவும் அதற்குரிய அனைத்து நடவடிக்கைகளையும் மாநில ஆட்சிக்குழுவும், செயற்குழுவும் எடுக்க வேண்டு ம் என கேட்டுக் கொள்வது என தீர்மானிக்கப்பட்டது.

iii) புதிதாக தேர்ந்தெடுக்கப்படும் மாநில ஆட்சிக்குழு விதி திருத்தங்களைச் செய்ய குழு ஒன்று அமைத்து அக்குழு கிளைகளின் கருத்து அறிந்து, விரிவாக விவாதித்து, தேவை ஏற்படின் அமைப்பு விதிகளில் திருத்தம் செய்து, திருச்சி மாவட்ட பதிவுத்துறை பதிவாளரின் ஒப்புதலைப் பெற்று நடைமுறைப்படுத்த வேண்டும் என இக்கிளை தீர்மானிக்கிறது.

iv) 25.1.2020 அன்று நடைபெற உள்ள மாநில செயற்குழுவில், கிளைச்செயலர் மட்டும் கலந்து கொள்ள வேண்டும் என்ற நிபந்தனை கடந்த கால நடைமுறைக்கு மாறாக உள்ளது. சந்தர்ப்ப சூழ்நிலையின் காரணமாக கிளைச்செயலர் கலந்துக் கொள்ள முடியாத நிலையில் கிளையின் வேறு பொறுப்பாளர்கள் கலந்துக் கொள்ள வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. (தீர்மானத்துக்கு கிளை உறுப்பினர் பேரா.P.கணேசன் (Bot) மட்டும் தனது மறுப்பை தெரிவித்தார். அவர் மறுப்பு பதிவு செய்யப்பட்டுள்ளது.)

v) TANRECTA அமைப்பு விதிகளை பின்பற்றி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் தகுதி மற்றும் அவர் செலுத்தி நிதி தொடர்பான விவரங்கள் குறித்து கிளைச்செயலர் சான்றழித்த பிறகு தேர்தல் குழு மாநில பொருளர் உறுதிப்படுத்தவில்லை எனக் கூறி வேட்புமனுவை நிராகரித்து இருப்பது வன்மையாக கண்டிக்கதக்கது என தீர்மானிக்கப்பட்டது.

vi) TANRECTA வின் அமைப்பு விதிகள் இப்போது நடைமுறையில் இல்லை, விதிகள் மாற்றப்பட்டுள்ளது என தேர்தல் குழு அமைப்பாளர் தெரிவித்திருப்பது உண்மைக்கு மாறான செய்தியாகும் என்பதோடு வன்மையாக கண்டிக்கத்தக்கது எனவும் தீர்மானிக்கிறது.

vii) மாநிலத் தேர்தல் வேட்பு மனு பரிசீலனையின்போது. மாநிலத் துணைத்தலைவர் பதவிக்கு போட்டியிட்ட வேட்பாளரையோ, அவரது பிரதிநிதியையோ அனுமதிக்காத தேர்தல் குழு, இதே தேர்தலில் போட்டியிட்ட மாநிலப் பொதுச்செயலர் மற்றும் மாநிலப் பொருளர் வேட்பாளர்களை அனுமதித்தது ஒருதலைபட்சமான நடவடிக்கை என தீர்மானிக்கப்பட்டது.

viii) கிளைத் தேர்தலில் உறுப்பினர் கட்டணம், அறக்கட்டளை நிதி, AIFRUCTO நிதி, கட்டிட நிதி, கழக வளர்ச்சி நிதி முதலான ஐந்து நிதிகளையும் செலுத்தாத பலர் கிளைப் பொறுப்பாளர்களாகவும் மாநிலப் பொதுக்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றனர். இச்சூழலில் மாநிலத் தேர்தலுக்கு புதிய விதியை சேர்ப்பதால் பல்வேறு நடைமுறை சிக்கல்கள் உருவாகின்றன. கிளைத் தேர்தலுக்கு ஒருவிதி மாநிலத் தேர்தலுக்கு ஒரு விதி என்பது இயக்க செயல்பாடுகளுக்கு எதிரானது என தீர்மானிக்கப்பட்டது.

மேற்கண்ட 8 தீர்மானங்களும் நிறைவேற்றிய நிலையில், சில உறுப்பினர்கள் சேலம் கிளை சார்பாக TANRECTAக்கு சென்னையில் புதிய கட்டம் வாங்குவதற்கோ, கட்டுவதற்கோ சேலம் கிளை ஆதரவு இல்லை என, ஏற்கனவே





இரண்டு பொதுக்குழுவிலும், ஒரு செயற்குழுவிலும் தீர்மானம் நிறைவேற்றியுள்ள நிலையில், 17.09.2019 அன்று நடைபெற்ற மாநில செயற்குழுவில், கிளை சார்பாக கலந்துக் கொண்ட அப்போதைய கிளைப் பொருளர் பேரா.S.இராமச்சந்திரன் அவர்கள், எப்படி சேலம் கிளை கட்டிட நிதிக்கு ஒப்புதல் தந்துள்ளது என கூறலாம் என வினாக்களை எழுப்பினர். உறுப்பினர் எழுப்பிய வினாக்களுக்கு பேரா.S.இராமச்சந்திரன் அவர்கள், கிளைப் பொதுக்குழு செயற்குழு முடிவுகளுக்கு மாறாக நான் பேசவில்லை என்றும், அன்று செயற்குழுவில் கலந்துக் கொண்ட உறுப்பினர்கள் பெரும்பாலேனோர் கட்டிட நிதிக்கு ஆதரவு தெரிவித்த நிலையில், நான், கட்டிட நிதி செலுத்துவதற்கு உறுப்பினர்களிடையே பேசி முயற்சி செய்கிறேன் என்றுதான் கூறினேனே தவிர கட்டிட நிதி கட்டுவதற்கு கிளைப் பொதுக்குழு ஒப்புதல் தந்துள்ளது என கூறவில்லை என்றும், நான் கூறிய கருத்துக்கு மாறாக பொதுச்செயலர் TANRECTA Speaks-ல் பதிவு செய்திருப்பது உண்மைக்கு மாறானதாக உள்ளது என வேதனையுடன் தெரிவித்துக் கொண்டார்.

பின்னர் வருமான வரித்துறைக்கு சமர்ப்பிக்க வேண்டிய படிவம், வருமானவரி செலுத்து வது குறித்து செயலர் கூறிய கருத்துக்குப்பின் கிளைப் பொருளர் நன்றி கூற கூட்டம் இனிதே நடைபெற்றது. **அடுத்தக்கூட்டம் 11.02.2020 செவ்வாய்க்கிழமை, சேலம்-7 அரசு கலைக்கல்லூரி வளாகத்தில் மாலை 4.00 மணி அளவில் நடைபெறும்.**

பேரா.**மு. ரவிந்திரன்**
செயலர், சேலம் கிளை.

**சென்னை கிளை**

சென்னை கிளையின் பொதுக்குழுக் கூட்டம் 11.01.2020, சனிக் கிழமையன்று, காயிதே மில்லத் அரசு மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. கிளைத் தலைவர் முனைவர் வை. சுவாமிநாதன் தலைமை ஏற்க, 70 உறுப்பினர்கள் பங்கேற்றனர். வரவேற்புரைக்குப்பின் தலைமையுரையாற்றிய கிளைத் தலைவர், குடியுரிமை திருத்தச் சட்டம் மற்றும் தேசிய குடிமக்கள் பதிவேடு ஆகியவை இந்தியாவின் மதச்சார்பற்ற கோட்பாட்டுக்கு எதிராக உள்ளதுடன் குடியுரிமை பற்றி மக்களிடையே ஏற்பட்டுத்தியுள்ள அச்சத்தையும் பதற்றத்தையும் பற்றியும், சர்வம் தனியார்மயம் என்ற கொள்கையுடன் லாபகரமாக இயங்கும் பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளைக்கூட தனியாருக்கு விற்கும் அரசின் நடவடிக்கை, தொழிலாளர் பாதுகாப்புச் சட்டங்களை நீர்த்துப்போகச் செய்து, அவர்களுக்கு பணிநிலை/ஊதியம்/ஓய்வூதியம் தொடர்பாக பாதுகாப்பில்லாத நிலையை ஏற்படுத்துதல், ஆகியவற்றுக்கு எதிரான மத்திய மாநில அரசு ஊழியர்களும் தொழிற்சங்கத்தினரும் நடத்திய வேலைநிறுத்தப் போராட்டம், மற்றும் ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகத்தில் நடந்த முகமூடித் தாக்குதல், அதனை எதிர்த்து நாடு முழுவதும் நடந்த போராட்டங்கள் பற்றியும் எடுத்துரைத்தார்.

மருத்துவக் காரணங்களால் செயலர் வரமுடியாத நிலையில், அறிக்கை அளித்த இணைச் செயலர் முனைவர் CR ரவி, ஓய்வூதிய அலுவலரை சந்தித்துப் பேசியதையும், அனைவரும் ஜனவரி 20-க்குள் உரிய சான்றுகளுடன் வருமான வரிக் கணக்கை அளித்து, அடுத்த இரு மாதங்களில் பிடித்தம் செய்யப்பட வேண்டிய

வரியை தெரிவிக்குமாறும், இல்லையேல் கூடுதலான வரிப் பிடித்தம் செய்யப்படலாம் என்பதையும் விளக்கினார். மேலும் 2005-க்குப் பின் ஓய்வு பெற்றவர்களிலும் சிலருக்கு யுஜிசி ஊதியத் திருத்தம் (G.O. 145) அடிப்படையில் 2.57-க்குப் பின்னர் இரண்டாம் கட்ட திருத்தமும் கூடுதல் ஓய்வூதியம் பெறும் வாய்ப்பும் உள்ளதாகவும், அவர்கள் அதனைப் பெற்றிட நடவடிக்கை எடுக்குமாறும் தெரிவித்தார். கிளைப் பொருளாளர் முனைவர் உஷா ரகோத்தம், சென்ற மாதம் 80 வயது நிறைவு பெற்றோர் பாராட்டு விழா செலவுக் கணக்குகளை தெரிவித்து, நடப்பு நிதி ஆண்டு முடியவுள்ள நிலையில் உறுப்பினர்கள் செலுத்தவேண்டிய கட்டணங்களை விரைந்து செலுத்திட கேட்டுக்கொண்டார். சனவரி மாதத்தில் பிறந்தநாள் காணும் பேராசிரியர்களை, துணைத் தலைவர் முனைவர் இல. வெங்கடசாமி அறிமுகம் செய்ய, அவர்களுக்கு துண்டுகள் அணிவித்து பாராட்டுகளும் வாழ்த்துகளும் தெரிவிக்கப்பட்டன. சென்ற மாத கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட அடிப்படையில், வேட்பு மனுக்கள் நிராகரிப்பு மற்றும் அமைப்பு விதிகளை மீறி தேர்தல் நடத்தப்படுவதை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தது, அதன் விளைவாக ஜனவரி 28-ஆம் தேதி நடைபெறவேண்டிய மாநிலத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது, ஆகியவை பற்றி விளக்கிக் கூறியபின், மாநிலக் கழகத்தால் நம் முன் வைக்கப்பட்டுள்ள கேள்விகளான: ‘இன்றைய நிலையில் தற்போதைய விதிகளின்படி தேர்தல் நடத்தவேண்டுமா அல்லது பல்வேறு நிதிகளையும் உள்ளடக்கி விதிகளை திருத்தியபின் நடத்தவேண்டுமா என்பதையொட்டி நடந்த விவாதத்தில், பல உறுப்பினர்கள் கருத்து தெரிவித்தனர். தேர்தல் தொடர்பான பிற பிரச்சினைகள் பற்றியும் விவாதிக்கப்பட்டு, கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:

1 தற்போதைய அமைப்பு விதிகளைப் பின்பற்றி, புதிய தேர்தல் குழு அமைத்து, மாநிலத் தேர்தலை ஒரு மாத காலத்திற்குள் நடத்திட வேண்டும்.

2 அடுத்து வரும் ஆட்சிக்குழு பொதுக்குழுவைக் கூட்டி விதித் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும்.

3 கழகம் தொடங்கிய காலந்தொட்டு பின்பற்றப்பட்டுவரும் நடைமுறையை ஒட்டி, கிளைச் செயலர் அல்லது கிளையின் சார்பில் தீர்மானிக்கப்பட்ட ஒருவர் மாநில செயற்குழுவில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும்.

4 சென்னை கிளையில், நிதிகளை செலுத்தி, அதற்கான சான்றளிப்புடன் மூவர் வேட்புமனுக்கள் அனுப்பியதில் ஒருவர் மனுவை மட்டும் ஏற்றுக்கொண்டு, மற்ற இருவர் மனுக்களை தேர்தல் குழு தள்ளுபடி செய்ததை வன்மையாகக் கண்டிப்பதென தீர்மானிக்கப்பட்டது.

5 சென்னைக் கிளைப் பொருளாளரின் வேட்புமனுவை, ‘தொடர்ந்து மூன்று ஆண்டுகள் உறுப்பினர் கட்டணம் செலுத்தவில்லை‘ எனக்கூறி நிராகரித்தனர். எந்த விதி எண்ணில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது என்று அவர் கேட்டதற்கு **‘Prerogative Right’** எனக்கூறிய தேர்தல் குழு அமைப்பாளரை இக்கிளை வன்மையாகக் கண்டிப்பதுடன், அவ்வாறு அமைப்பு விதிகளில் எந்த பிரிவில் உள்ளது என்று மாநில செயற்குழு தெளிவுபடுத்த வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.





6 ‘அமைப்பு விதிகள் தற்போது நடைமுறையில் இல்லை, மாற்றப்பட்டுவிட்டது‘ எனவும், ‘கிளைச் செயலர்கள் கவனக்குறைவாக சான்று பகிர்வர்‘ எனவும், ‘சென்னை கிளைச் செயலர் **Mind Apply** செய்து கையெழுத்திடவில்லை‘ எனவும், ‘மூன்றாண்டுகள் தொடர்ந்து உறுப்பினர் கட்டணம் கட்டவில்லை எனக்கூறி வேட்பு மனுவை நிராகரித்ததுடன், அதைப் பற்றி கேட்டதற்கு **‘Prerogative right’** எனவும் கூறி பல்வேறு வகைகளில் அத்துமீறி செயல்பட்ட தேர்தல் குழு அமைப்பாளர் பேரா. கனகசுந்தரம் அவர்களை வன்மையாகக் கண்டிப்பதோடு அவர் மாநில செயற்குழுவில் வருத்தம் தெரிவிக்க வேண்டும் எனவும் தீர்மானிக்கப்படுகிறது.

7 வேட்பு மனுக்கள் பரிசீலனைக்கு முன்னரே அவற்றைப் பிரித்துப் பார்த்து வேட்பாளர்களிடம் பேசி வாழ்த்து தெரிவித்து தனக்கு ஆதரவு கேட்டது, சிலரிடம் நிதிகளை செலுத்தச் சொன்னதோடு, அதற்கான ரசீதுகளை வாட்ஸப்பில் அனுப்ப சொன்னது, சென்னை கிளையில் இருந்து மனுக்கள் அனுப்பிய மூவரில் ஒருவரிடம் ரசீதை அனுப்புமாறு கேட்டுப் பெற்றுக்கொண்டு, மற்ற இருவரும் நிதிகள் செலுத்தவில்லை என தேர்தல் குழுவிடம் அறிக்கை அளித்து வேட்பு மனுக்களை நிராகரிக்கச் செய்தது எனப் பல்வேறு முறைகேடுகள் மூலம் இன்றைய சிக்கல்களுக்கு முக்கிய காரணமாகவுள்ள மாநிலப் பொருளாளர் பேரா. பாலசுப்பிரமணியன் அவர்களின் தன்னிச்சையான செயல்பாட்டினை வன்மையாகக் கண்டிப்பதுடன், அவர் செயற்குழுவில் வருத்தம் தெரிவிக்க வேண்டும் எனவும் தீர்மானிக்கப்படுகிறது.

நிறைவாக, சென்னை பல்கலைக்கழக பரிந்துரை பெற்ற ‘பன்னாட்டுப் பொருளியல்‘ நூலாசிரியர் பேரா. வே. கலியமூர்த்திக்கு பாராட்டும், தேர்தல் வழக்கு நிதியாக ரூ. 5000/- வழங்கிய பேரா. கே.பி.கந்தசாமி அவர்களுக்கு நன்றியும் தெரிவிக்கப்பட்டது. **அடுத்த மாத கூட்டம் 08.02.2020, சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு, காயிதே மில்லத் அரசு மகளிர் கல்லூரியில் நடைபெறும்.**

முனைவர் **வை. சுவாமிநாதன்,**
தலைவர், சென்னை கிளை